தினமணி

இன்றைய வேளாண் செய்திகள்

11.01.2013 A.M

## மரபணு மாற்ற பயிர்: கள ஆய்வுக்கு தடை விதிக்க முடியாது



மரபணு மாற்ற பயிர் தொடர்பான அனைத்து கள ஆய்வுகளுக்கும் தடை விதிக்க வேண்டும் என்ற நாடாளுமன்ற நிலைக்குழுவின் பரிந்துரையை ஏற்க முடியாது என மத்திய வேளாண் துறை அமைச்சர் சரத் பவார் கூறியுள்ளார்.

கடந்த ஆகஸ்ட் மாதம், வாசுதேவ் ஆச்சார்யா தலைமையிலான நாடாளுமன்ற நிலைக்குழு (வேளாண்மை) மத்திய அரசிடம் தனது பரிந்துரையை சமர்ப்பித்தது. சிறப்பான கண்காணிப்பு மற்றும் பராமரிப்பு நடைமுறைகள் உருவாக்கப்படும் வரை, அனைத்து மரபணு மாற்ற பயிர்களுக்கான திறந்தவெளி கள ஆய்வுகளுக்கும் தடை விதிக்க வேண்டும் என அதில் கூறப்பட்டுள்ளது.

இதுகுறித்து சரத் பவார் பி.டி.ஐ.க்கு அளித்த பேட்டியில் கூறியிருப்பதாவது: நாடாளுமன்ற நிலைக்குழுவின் பரிந்துரையை நாங்கள் ஆதரிக்கவில்லை. இந்தியா போன்ற மக்கள் தொகை அதிகம் உள்ள நாடுகளில் அனைவருக்கும் உணவு கிடைப்பதை உறுதி செய்ய வேண்டியது அவசியமாகிறது.

இத்தகைய சூழ்நிலையில் மரபணு மாற்ற பயிர்கள் மற்றும் அது தொடர்பான ஆராய்ச்சி தொடர்ந்து நடைபெற வேண்டும். இது தொடர்பான கள ஆய்வுகளுக்கு தடை விதிக்க முடியாது.

அதேநேரம், மரபணு மாற்ற பயிர்களை வணிக ரீதியில் பயிரிட அனுமதிக்கும்போது எச்சரிக்கையாக இருக்க வேண்டும். குறிப்பாக, சுற்றுச்சூழல், மற்ற பயிர்கள், விலங்குகள் மற்றும் மனிதர்களின் உடல்நலம் ஆகியவற்றுக்கு தீங்கு நேராதவாறு பாதுகாப்பை உறுதி செய்த பிறகே வணிக ரீதியில் பயிரிட இத்தகைய பயிர்களை அனுமதிக்க வேண்டும். இது விஷயத்தில் மிகுந்த கவனம் இருக்க வேண்டும் என்றார் பவார்.

இந்த பரிந்துரை மீதான "நடவடிக்கை அறிக்கையை' வேளாண் அமைச்சகம் தயாரித்துள்ளது. அதை கடந்த நவம்பர் மாதம் நாடாளுமன்ற நிலைக்குழுவிடம் வழங்கி உள்ளது. நாடாளுமன்றக் குழுவின் பரிந்துரையை ஏற்றுக் கொண்டு கள ஆய்வை தடை செய்தால், மரபணு மாற்ற பயிர்களின் பாதுகாப்பு சோதனை நடைமுறை தடைபடும். இது நாட்டு நலனுக்கு எதிரானதாக அமையும் என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நவீன உயிரி தொழில்நுட்பத்தின் பயனை அடைவதற்கும் இது தடையாக இருக்கும். மரபணு மாற்ற ஆராய்ச்சியில் சீனா மற்றும் பிரேசில் ஆகிய வளரும் நாடுகள் வேகமாக முன்னேறி வரும் நிலையில், நம் நாடு பின்னுக்குத் தள்ளப்பட்டு விடும் என்றும் அதில் கூறப்பட்டுள்ளது.

## வடகிழக்கு பருவமழை பொய்த்ததற்கு காரணம் என்ன?

தமிழகத்தில் வடகிழக்கு பருவமழை பொய்த்ததற்கான காரணம் குறித்து சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் ரமணன் வியாழக்கிழமை விளக்கினார்.

தென் சீனக் கடலில் உருவான "போபா' புயல், சில புயல்கள் தமிழக கடலோரப் பகுதியிலிருந்து ஈரப்பதத்தை உறிஞ்சிவிட்டதே மழை குறைந்ததற்குக் காரணம் என்று அவர் கூறினார்.

சென்னை வானிலை ஆய்வு மையத்தில் கல்லூரி மாணவர்களுக்கான பருவமழை 2012 என்ற கருத்தரங்கம் நடைபெற்றது. இந்த கருத்தரங்கத்தில் தென்மேற்கு பருவமழை மற்றும் வடகிழக்கு பருவமழை குறித்து மாணவர்களுக்கு விளக்கப்பட்டது.

இந்த கருத்தரங்கத்தில் பேசிய ரமணன், தமிழகத்தில் இந்த ஆண்டு குறைவான மழையே பெய்துள்ளது. இதற்கு பல்வேறு காரணங்கள் உள்ளன.

வங்கக் கடலில் கடந்த நவம்பர் 12-ம் தேதி உருவான காற்றழுத்தத் தாழ்வு நிலை ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு நிலையாக வலுப்பெற்றது. பின்னர் இது வலுவிழந்து வடக்கு நோக்கி நகர்ந்து வட தமிழகம் மற்றும் தென் ஆந்திரக் கடல் பகுதியில் நிலை பெற்றது. இது தமிழக கடல் பகுதியில் ஈரப்பதத்தை உறிஞ்சியது. இதன் காரணமாக தமிழகத்தில் குறைவான மழை பெய்தது. இதனால்

கர்நாடகம் மற்றும் ஆந்திர மாநிலங்களில் குளிர்க் காற்று வீசியது. மேலும் தென் சீனக் கடலில் உருவான போபா புயல், தமிழக கடல் பகுதியில் இருந்த ஈரப்பதத்தை உறிஞ்சியது. இந்தப் புயல் வங்கக் கடலில் புதிய காற்றழுத்த தாழ்வு நிலைகள் உருவாகாத நிலையை ஏற்படுத்தியது.

வங்கக் கடலில் உருவான காற்றழுத்த தாழ்வு நிலை மற்றும் தாழ்வுப் பகுதிகள், தென் திசை நோக்கி தென் இலங்கை கடற்பகுதிக்குச் சென்றன. இதன் காரணமாக தமிழகத்தில் மழை பெய்யவில்லை.

இந்த வடகிழக்கு பருவமழை காலத்தில் உருவான "நிலம்' புயல், அக்டோபர் இறுதியில் மற்றும் டிசம்பர் தொடக்கத்தில் உருவான காற்றழுத்த தாழ்வு நிலைகள் மூலமே தமிழகம் ஓரளவு மழையை பெற்றது, என்றார்.

தமிழகத்தில் 16 சதவீதம் குறைவு: வடகிழக்கு பருவ காலத்தில் (அக்டோபர் 1-ம் தேதி முதல் டிசம்பர் 31-ம் தேதி வரை) தமிழகத்தில் 16 சதவீதம் குறைவான மழை பெய்துள்ளது என்று வானிலை ஆய்வு மைய தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த காலகட்டத்தில் தமிழகம் மற்றும் புதுவையில் 442 மி.மீ. மழை பெய்திருக்கவேண்டும். ஆனால், 372 மி.மீ. மழையே பெய்துள்ளது. இது 16 சதவீத குறைவாகும். கேரளத்தில் 35 சதவீதமும், ஆந்திர மாநிலம் ராயலசீமா பகுதியில் 2 சதவீதமும், தெற்கு கர்நாடகத்தில் 23 சதவீதமும் குறைவான மழை பெய்துள்ளது.

அதேவேளையில், கடலோர ஆந்திர மாநில பகுதிகளில் 33 சதவீதம் கூடுதல் மழை பதிவாகியுள்ளது. அங்கு சராசரியாக 327 மி.மீ. மழை பெய்யும். ஆனால், 435 மி.மீ. மழை பெய்துள்ளது. கடலோர ஆந்திர மாநிலத்தில் கூடுதல் மழை பெய்ததற்கு, தமிழக கடலோர பகுதியில் உருவான சில காற்றழுத்த தாழ்வு நிலைகள் ஆந்திரம் நோக்கி நகர்ந்து சென்றதே ஆகும்.

இந்த மூன்று மாத பருவமழை காலத்தில், அக்டோபர் மாதம் மட்டும் தமிழகம் மற்றும் புதுவையில் 43 சதவீதம் கூடுதல் மழை பெய்துள்ளது. அதேவேளையில், நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களில் முறையே 54 சதவீதம் மற்றும் 62 சதவீதம் குறைவான மழை பெய்துள்ளது.

## ஜனவரி 18-ல் விவசாயிகள் குறைதீர் கூட்டம்

விழுப்புரம் மாவட்ட விவசாயிகள் குறைதீர் கூட்டம், ஜனவரி 18-ம் தேதி நடைபெற உள்ளதாக ஆட்சியர் வா. சம்பத் தெரிவித்தார்.

அவரது அறிக்கை: 2013 ஜனவரி மாதத்துக்கான விவசாயிகள் குறைதீர் கூட்டம் வரும் 18-ம் தேதி, மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் மாவட்டத்திலுள்ள விவசாய சங்க பிரதிநிதிகளும், விவசாயிகளும் பங்கேற்று பயனடைய வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நிலக்கடலை விதை பரிசோதனை

நிலக்கடையில் விதை பரிசோதனை செய்து கூடுதல் மகசூல் பெறலாம் எனத் திருவள்ளூர் விதை பரிசோதனை ஆய்வக வேளாண் அலுவலர் பி.முத்துப்பெருமாள் தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்ட செய்திக்குறிப்பு:

நிலக்கடலை சாகுபடியில் அதிக செலவாகும் இடுபொருளான விதை, தரமானதாக இருந்தால் தான் தேவையான அளவு பயன்படுத்தி செலவைக் குறைக்கலாம். நிலக்கடலை சாகுபடியில் குறைந்தபட்ச முளைப்புத் திறன் 70 சதம் இருந்தால் தான் பயிர் எண்ணிக்கையைப் பராமரிக்க முடியும்.

அதைச் சரியாரியாக பராமரிக்கும் போது தற்போது கிடைக்கும் மகசூலை விட கூடுதல் மகசூல் பெறலாம். எனவே நிலக்கடலை பயிரிடும் விவசாயிகள் தங்களிடம் விதைக்காக இருப்பில் உள்ள நிலக்கடலையில் இருந்து ஒரு கிலோ மாதிரி எடுத்து வேளாண்மை அலுவலர்,

விதை பரிசோதனை நிலையம், 48. ஜே.என் ரோடு, பெரியகுப்பம், திருவள்ளூர்-1 என்ற முகவரிக்கு ரூ.30 பரிசோதனைக் கட்டணத்துடன் நேரிலோ அல்லது தபால் மூலமோ அனுப்பி வைக்கலாம் எனச் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பால் கொள்முதல் விலையை உயர்த்த வலியுறுத்தல்

புதுச்சேரியில் பால் கொள்முதல் விலையை உயர்த்த வேண்டுமென உற்பத்தியாளர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

புதுச்சேரி பால் உற்பத்தியாளர்கள் சங்கத்தின் நிர்வாகிகள் கூட்டம் மதகடிப்பட்டில் புதன்கிழமை நடைபெற்றது.

கூட்டத்திற்கு, சங்கத்தின் புதுச்சேரி தலைவர் பாலச்சந்தர் தலைமை வகித்தார். தமிழ்நாடு பால் உற்பத்தியாளர் சங்கத்தின் மாநிலத் துணைத் தலைவர் ரவிச்சந்திரன், அகில இந்திய விவசாயிகள் சங்க பிரதேச துணைத் தலைவர் பத்மநாபன், சங்கத்தின் பொதுச்செயலர் ஜீவானந்தம், நிர்வாகிகள் கருணாகரன், முருகையன் உள்ளிட்டோர் இதில்

பங்கேற்றனர்.

தீர்மானம்:

புதுச்சேரி பால் உற்பத்தியாளர்களுக்கு லிட்டருக்கு ரூ.19 தற்போது வழங்கப்பட்டு, நுகர்வோரிடம் லிட்டர் ரூ.26-க்கு விற்பனை செய்யப்படுகிறது. தற்போது தீவனங்களின் விலை கடுமையாக உயர்ந்துள்ள நிலையில், அரசு சார்பில் வழங்கப்படும் கொள்முதல் விலையிலிருந்து கூடுதலாக லிட்டருக்கு ரூ.7 மானியமாகச் சேர்த்து உற்பத்தியாளர்களுக்கு வழங்க வேண்டும்.

75 விழுக்காடு மானியத்தில் மாட்டுத் தீவனம் வழங்க வேண்டும். கறவை மாடு வாங்க கடன் வழங்க வேண்டும். ஏற்கெனவே, பால் பண்ணை வைப்பதற்காக பெற்ற கடனைத் தள்ளுபடி செய்ய வேண்டும் என வலியுறுத்தித் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மேலும் இக்கோரிக்கைகளை வலியுறுத்தி வரும் பிப்ரவரி 28-ம் தேதி பால் உற்பத்தியாளர்கள் தங்களது மாடுகளுடன் புதுச்சேரி சட்டப்பேரவை அருகே ஆர்ப்பாட்டம் நடத்தவும் முடிவு செய்யப்பட்டது.

## ஜன.18 விவசாயிகள் குறை தீர்க்கும் கூட்டம்

ராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் ஆட்சியர் க.நந்தகுமார் தலைமையில் இம்மாதம் 18 ஆம் தேதி வெள்ளிக்கிழமை காலை 11.30 மணிக்கு விவசாயிகள் குறை தீர்க்கும் கூட்டம் நடத்தப்பட இருப்பதாக ஆட்சியர் அலுவலகம் வியாழக்கிழமை வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விவசாயிகளும்,விவசாயிகள் சஙகப் பிரதிநிதிகளும் இக்கூட்டத்தில் கலந்து கொண்டு விவசாயம் சார்ந்த பொருட்கள் குறித்து விவாதிக்க கேட்டுக் கொள்ளப்படுவதாகவும் அக்கோரிக்கைகள் மட்டுமே பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ள இருப்பதாகவும் அச்செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மின்வெட்டால் தொழில்கள், விவசாயம் முடக்கம்

தமிழகத்தில் கடுமையான மின்வெட்டு காரணமாக தொழில்களும் விவசாயமும் முடங்கியுள்ளதாக, தி.மு.க. பொருளாளர் மு.க.ஸ்டாலின் குற்றஞ்சாட்டினார்.

கோவை மாவட்டம், பொள்ளாச்சி அருகே உள்ள கிணத்துக்கடவில், பொள்ளாச்சி நாடாளுமன்றத் தொகுதிக்கு உள்பட்ட பொள்ளாச்சி, உடுமலை, வால்பாறை, மடத்துக்குளம், கிணத்துக்கடவு, தொண்டாமுத்தூர் சட்டப் பேரவைத் தொகுதிகளுக்கான தி.மு.க. செயல்வீரர்கள் கூட்டம், மாவட்டச் செயலாளர் பொங்கலூர் நா.பழனிசாமி தலைமையில் வியாழக்கிழமை நடைபெற்றது.

திருப்பூர் மாவட்டச் செயலாளர் மு.பெ.சாமிநாதன் வரவேற்றார். மு.கண்ணப்பன், மு.ராமநாதன், மாவட்ட அவைத் தலைவர் வே.சௌந்திரராஜன், பொருளாளர் நாச்சிமுத்து, மத்திய அமைச்சர் காந்திச்செல்வன், கோவை மாநகர செயலாளர் எம்.வீரகோபால் முன்னிலை வகித்தனர்.

இதில், தி.மு.க. பொருளாளரும் முன்னாள் துணை முதல்வருமான மு.க.ஸ்டாலின் பேசியது:

45 ஆண்டுகளாக தி.மு.க.வைக் கட்டிக் காத்துவரும் கருணாநிதி, அடுத்த வாரிசாக என்னை முன்மொழிவேன் என்று கூறியுள்ளதைவிட, எனது வாழ்வில் பெருமையான விஷயம் எதுவும் இல்லை.

ஒன்றரை ஆண்டுகளாக அ.தி.மு.க. அரசு மக்கள் நலனில் அக்கறை இல்லாமல் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. கடுமையான மின்வெட்டு காரணமாக தொழில்கள் மற்றும் விவசாயம் முடங்கியுள்ளன. தமிழ்நாட்டில் கொலை, கொள்ளை, பெண்கள் மீதான பாலியல் வன்முறை அதிகரித்துவிட்டது.

இதன் காரணமாக நாடாளுமன்றத் தேர்தலுடன், சட்டப்பேரவை தேர்தலும் வராதா என தமிழக மக்கள் நினைக்கின்றனர். வெற்றியையும், தோல்வியையும் ஒன்றாகக் கருதி செயல்படுபவர்கள் தான் தி.மு.க.வினர். வரும் நாடாளுமன்றத் தேர்தலில், கடந்த தி.மு.க. ஆட்சியின் சாதனைகளை மக்களிடம் எடுத்துக் கூறி அனைத்து தொகுதிகளிலும் வெற்றி பெற கட்சியினர் அயராமல் உழைக்க வேண்டும் என்றார்.

ஒன்றிய, நகரச் செயலாளர்கள் வே.இளங்கோவன், நா.பிரபாகரன், தென்றல் செல்வராஜ், கோழிக்கடை கணேசன், வே.மருதவேல், சாந்திதேவி தர்மராஜ், கே.பி. ராமசாமி, எஸ்.செல்வராஜ், ஆ.ராமலிங்கம், தா.துரைசாமி, கே.ரகுநாதன், ச.ராஜமாணிக்கம், வி.பி.செல்வராஜ், பொதுக்குழு

உறுப்பினர்கள் திப்பம்பட்டி வே.ஆறுச்சாமி, ந.மகேஸ்வரி, மாவட்ட அணி அமைப்பாளர் ரா.நவநீதகிருஷ்ணன் மற்றும் தி.மு.க. நிர்வாகிகள் உள்பட 5 ஆயிரத்தும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

கிணத்துக்கடவு ஒன்றியச் செயலாளர் சே.நடராஜன், நகர செயலாளர் டி.கதிர்வேல் ஆகியோர் நன்றி கூறினர்.

**"வேளாண் இயந்திரங்களுக்கான மானியங்கள் பெற விண்ணப்பிக்கலாம்'**

தூத்துக்குடி மாவட்டத்தில், வேளாண் இயந்திரங்கள் வாங்குவதற்கு மானியம் பெற விண்ணப்பிக்கலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து மாவட்ட ஆட்சியர் ஆஷிஷ்குமார் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

தூத்துக்குடி மாவட்டத்தில் வேளாண்மை பொறியியல் துறை மூலம் விவசாயிகளுக்கு தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் நிகழ் நிதியாண்டில் வேளாண் இயந்திரங்கள் வாங்குவதற்கு மானியம் வழங்க அரசாணை வரப்பெற்று உள்ளது. அதன்படி பொதுப்பிரிவினருக்கு வேளாண் இயந்திரங்கள் 50 சதவிகிதம் மானியத்திலும், அதிகபட்சமாக நெல் அறுவடை இயந்திரத்துக்கு ரூ. 4 லட்சமும் மானியமாக வழங்கப்படுகிறது.

நிகழ் நிதியாண்டில் இந்தத் திட்டத்தின் கீழ் மக்காச்சோள அறுவடை இயந்திரம், பல்வகை பயிர்கள் கதிரடிக்கும் இயந்திரம், களையெடுக்கும் இயந்திரம், விசைத்தெளிப்பான், கைத்தெளிப்பான், நேரடி நெல் விதைப்பு கருவி, தென்னை மரம் ஏறும் கருவி, வைக்கோல் கட்டும் இயந்திரம், பவர் டில்லர், நெல் அறுவடை இயந்திரம் ஆகியவை மானியத்தில் வழங்க

ரூ. 83 லட்சத்து 75 ஆயிரம் ஒதுக்கீடு செய்யப்பட்டு உள்ளது.

இந்து ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின வகுப்பினருக்கு 60 சதவிகிதம் மானியத்திலும், அதிகபட்சமாக நெல் அறுவடை இயந்திரத்துக்கு ரூ. 5 லட்சமும் மானியமாக வழங்கப்படுகிறது. நிகழ் நிதியாண்டில் இந்தப் பிரிவின் கீழ் வேளாண் கருவிகள் மானியத்தில் வழங்கும் பொருட்டு ரூ. 32 லட்சத்து 50 ஆயிரம் ஒதுக்கீடு செய்யப்பட்டு உள்ளது.

மேலும், வேளாண் இயந்திரமயமாக்கல் திட்டத்தின் கீழ் மானியத்தில் விவசாயிகளுக்கு பவர் டில்லர், டிராக்டர், சுழற்கலப்பை ஆகிய இயந்திரங்கள் வாங்குவதற்கு ரூ. 5 லட்சத்து 15 ஆயிரம் நிதி ஒதுக்கப்பட்டு உள்ளது.

பவர் டில்லர், டிராக்டர் ஆகியவற்றுக்கு மானியமாக ரூ. 45 ஆயிரமும், சுழற்கலப்பை வாங்குவதற்கு ரூ. 20 ஆயிரமும் மானியம் வழங்கப்படுகிறது.

இது தொடர்பான விவரங்கள் மற்றும் விண்ணபப்பங்களைப் பதிவு செய்வதற்கு, கோவில்பட்டி, விளாத்திகுளம், புதூர், கயத்தாறு, ஓட்டப்பிடாரம் வட்டங்களைச் சேர்ந்தவர்கள், கோவில்பட்டி வேளாண்மை பொறியியல் துறை உதவி செயற்பொறியாளரையும், தூத்துக்குடி, கருங்குளம், ஸ்ரீவைகுண்டம் வட்டங்களைச் சேர்ந்தவர்கள் தூத்துக்குடி வேளாண்மை பொறியியல் துறை உதவி செயற்பொறியாளரையும், திருச்செந்தூர், உடன்குடி, ஆழ்வார்திருநகரி, சாத்தான்குளம் வட்டங்களைச் சேர்ந்தவர்கள் திருச்செந்தூர் வேளாண்மை பொறியியல் துறை உதவி செயற்பொறியாளர் அலுவலகத்தையும் அணுகுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

விவசாயிகள் தங்களது விவசாய நிலத்துக்கான கணினி பட்டா, சிட்டா அடங்கல் மற்றும் ரேஷன்கார்டு நகல், பாஸ்போர்ட் அளவு புகைப்படம் 2 ஆகியவற்றுடன் சம்பந்தப்பட்ட அலுவலகங்களில் விண்ணபப்பங்களைப் பதிவு செய்து பயன்பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள் என செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஜனவரி 17-ல் விவசாயிகள் குறைதீர் கூட்டம்

தூத்துக்குடி மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் இம் மாதம் 17-ம் தேதி நடைபெறுகிறது.

இதுகுறித்து மாவட்ட ஆட்சியர் ஆஷிஷ்குமார் வெளியிட்ட செய்திக்குறிப்பு: தூத்துக்குடி மாவட்டத்தில் மாதம்தோறும் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடத்தப்பட்டு வருகிறது. அதன்படி, ஜனவரி மாதத்துக்கான விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் இம் மாதம் 17-ம் தேதி பகல் 11 மணிக்கு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெறுகிறது.

ஆட்சியர் தலைமையில் நடைபெறும் இந்தக் கூட்டத்தில் விவசாய சங்கப் பிரதிநிதிகள், பாசன சங்கப் பிரதிநிதிகள் மற்றும் விவசாயிகள் தவறாமல் கலந்து கொண்டு தங்களது குறைகளைத் தெரிவிக்கலாம் என செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.சமத்துவ பொங்கல் விழாதூத்துக்குடி, ஜன. 10: தூத்துக்குடி அரசு செவிலியர் பயிற்சி கல்லூரியில் பொங்கல் பண்டிகையையொட்டி சமத்துவ பொங்கல் மற்றும் கலை நிகழ்ச்சிகள் வியாழக்கிழமை நடைபெற்றது.

மருத்துவக் கல்லூரி முதல்வர் எட்வின்ஜோ தலைமை வகித்தார். செவிலியர் பயிற்சி கல்லூரி முதல்வர் ஈஸ்வரி முன்னிலை வகித்தார்.

விழாவில் மாணவிகள் பொங்கலிட்டனர்.பின்னர் மாணவிகளின் கலைநிகழ்ச்சிகளும், கோலப்போட்டிகளும் நடைபெற்றன.

போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவிகளுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன. இந்த நிகழ்ச்சியில் செவிலியர் பயிற்சிக் கல்லூரி மாணவிகள் பலர் கலந்து கொண்டனர்.

### பவானிசாகர் அணை நீர்மட்டம் 42.13 அடி

பவானிசாகர் அணையின் நீர்மட்டம் வியாழக்கிழமை நிலவரப்படி 42.13 அடியாக இருந்தது.

அணையின் அதிகபட்ச நீர்த்தேக்க உயரம் 105 அடி. அணைக்கு விநாடிக்கு 98 கன அடி நீர் வந்தது. அணையில் இருந்து ஆற்றில் 600 கன அடி நீர் திறந்துவிடப்பட்டது. வாய்க்காலில் பாசனத்துக்காக தண்ணீர் திறக்கப்படவில்லை. அணையில் நீர் இருப்பு 2.81 டி.எம்.சி.

10th jan 2013

### "வேளாண் பாதிப்பை விரிவாக ஆய்வு செய்ய வேண்டும்'

டெல்டா பகுதிகளில் பாதிக்கப்பட்ட வேளாண் பகுதிகளை உயர் மட்டக் குழுவினர் விரிவாக ஆய்வு செய்ய வேண்டுமென இந்திய கம்யூனிஸ்ட் வலியுறுத்தியுள்ளது.

இதுகுறித்து கட்சியின் மாவட்டச் செயலர் வெ. வீரசேனன் வெளியிட்ட செய்திக்குறிப்பு:

சம்பாவில் பாதிக்கப்பட்ட பகுதிகளை ஆய்வு செய்ய முதல்வர் ஜெயலலிதா அமைத்த நிதியமைச்சர் தலைமையிலான உயர்மட்டக் குழுவுக்கு பாராட்டுத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இக்குழுவினர் டெல்டாவில் பாதிக்கப்பட்ட பகுதிகளை முழுமையாக ஆய்வு செய்ய வேண்டும். முதல்வர் அறிவித்துள்ள நிவாரணத் தொகை ரூ. 13,692 போதாது என்பதால், ஏக்கருக்கு ரூ. 25 ஆயிரம் இழப்பீடு வழங்க வேண்டும்.

ஆய்வின்போது விவசாயிகள், விவசாய சங்கங்களிடம் நேரடியாக கருத்துக் கேட்க வேண்டும். தற்கொலை செய்து கொண்ட விவசாயிகளுக்கு ரூ. 10 லட்சம் நிவாரணம் வழங்க வேண்டும்.

நெல் பாதிப்புடன் தோட்டக் கலைப்பயிர்களையும் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும். வேலையில்லாதத் தொழிலாளர்கள் குடும்பத்துக்கு ரூ. 10,000 வழங்க வேண்டும். தில்லியில்

வியாழக்கிழமை நடைபெறவுள்ள காவிரிக் கண்காணிப்புக் குழு தமிழ்நாட்டுக்கு விவசாயத்துக்கும் குடிநீருக்கும் தேவையான நீரைப் பெற்றுக் கொடுக்க வேண்டும்.

மத்திய அரசு தமிழகத்துக்கு பேரிடர் இழப்பு நிதியாக ரூ. 10,000 கோடி வழங்க வேண்டும் என்றார் அவர்.

## தோட்டப்பயிர் சாகுபடிக்கு முழு மானியத்தில் இடுபொருள்கள்

நாகை மாவட்டத்தில் தோட்டப்பயிர் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு முழு மானியத்தில் வேளாண் இடுபொருள்கள் வழங்கப்படும் என்றார் நாகை மாவட்ட ஆட்சியர் து. முனுசாமி.

மயிலாடுதுறை வட்டம், வரதம்பட்டு ஊராட்சியில் மாவட்ட ஆட்சியரின் மனுநீதிநாள் முகாம் புதன்கிழமை நடைபெற்றது.

தலைமை வகித்த ஆட்சியர் து. முனுசாமி பேசியது:

வறுமைக் கோட்டிற்குக் கீழுள்ள அனைவருக்கும் அரசின் நலத் திட்டங்கள் முறையாகக் கிடைக்க வேண்டும் என்பதற்காகவே இத்தகைய முகாம்கள் நடத்தப்படுகின்றன.

பல்வேறு நலத் திட்டங்கள் அனைத்து தரப்பு மக்களுக்கும் கிடைக்க வேண்டும் என்பதில் தமிழக முதல்வர் சிறப்பு கவனம் செலுத்துகிறார்.

மழையின்மையால் சம்பா பயிரிட்டுள்ள விவசாயிகள் பயிரைக் காப்பாற்ற சமுதாய நாற்றாங்கால், நேரடி நெல்விதைப்பு, குளம், குட்டைகளிலிருந்து நீர் எடுத்துச் செல்ல முழு மானியத்தில் பிளாஸ்டிக் குழாய்கள், டீசல் மானியம், வறட்சியை தாங்கும் நுண்ணுயிர் கரைசல்கள், அரசுக் காப்பீட்டுத் தொகை உள்ளிட்டவை வழங்கப்படுகின்றன.

தோட்டப்பயிர் செய்யும் விவசாயிகளுக்கு முழு மானியத்தில் வேளாண் இடுபொருட்கள் வழங்கப்படுகின்றன என்றார் ஆட்சியர்.

தொடர்ந்து 4 பட்டா மாறுதல், 27 பேருக்கு வீட்டு மனைப்பட்டா, 35 பேருக்கு முதியோர் உதவித்தொகை, தாட்கோ நிறுவனம் மூலம் ஒருவருக்கு டாடா ஏசி வாகனம்,தோட்டக்கலைத் துறை சார்பில் ஒருவருக்கு சொட்டு நீர் பாசனக்கருவி, 2 பேருக்கு 2400 வாழைக்கன்றுகள் உள்ளிட்ட உதவிகளை அவர் வழங்கினார்.

முகாமில் 321 மனுக்கள் பெறப்பட்டு, அவற்றில் 113 மனுக்கள் ஏற்கப்பட்டன.

எம்எல்ஏ ஆர். அருள்செல்வன்,வருவாய்க் கோட்டாட்சியர் பொ. ரத்தினசாமி,தனித் துணை ஆட்சியர்கள் பொன்னையா (சமூகப் பாதுகாப்புத் திட்டம்),செம்புக்குட்டி (சிறப்பு திட்டச் செயலாக்கம்),சுகாதாரப் பணிகள் இணை இயக்குநர் குருநாதன்,ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர் பா. சந்தோஷ்குமார், ஒன்றியக் குழு உறுப்பினர் ர. சரளா,வட்டாட்சியர் பிச்சைராமன், ஊராட்சித் தலைவர் வீ. விமலா மற்றும் அரசு அலுவலர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், பொதுமக்கள் கலந்துகொண்டனர்.

## விதை உற்பத்தியாளர்களுக்கு பயிற்சி

கரூர் மாவட்டம், கீரனூரில் தனியார் விதை உற்பத்தியாளர்களுக்கான பயிற்சி புதன்கிழமை நடைபெற்றது.

விதைச் சான்று துறை மூலம் நடைபெற்ற இந்தப் பயிற்சிக்கு கடவூர் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் கு.ப. ஜெயந்தி தலைமை வகித்தார். குளித்தலை விதைச் சான்று அலுவலர் து. தியாகராஜன், விதை தரத்தின் முக்கியத்துவம், பயிற்சியின் அவசியம், அங்ககச் சான்றளிப்பு, விதைப் பண்ணை பதிவு, வயலாய்வு உள்ளிட்டவை குறித்து பேசினார்.

உதவி வேளாண்மை அலுவலர்கள் மாரிமுத்து, மணிகண்டன், இளங்கோ, துணை வேளாண்மை அலுவலர் குணசேகரன், கடவூர் வட்டார முன்னோடி விதை சாகுபடியாளர்கள் கலந்து கொண்டனர்.

## உளுந்து பயிரில் கூடுதல் மகசூல் பெற ஆலோசனை

வல்லம் வட்டாரத்தில் 3000 எக்டேர் பரப்பில் உளுந்து பயிரிடப்பட்டு வருகிறது. தற்போது உளுந்து பயிர் பூக்கும் தருவாயில் உள்ளது.

÷இது குறித்து வேளாண்மைத்துறை உதவி இயக்குநர் கே.ரவீந்திரன் வெளியிட்டுள்ள அறிக்கை:

÷உளுந்து பயிரில் பூத்த பூக்கள் உதிராமல் இருப்பதற்கும், பூக்கள் முழுவதும் காய்களாக மாறுவதற்கும் டி.ஏ.பி.கரைசல் தெளிக்க வேண்டியது அவசியம். இதற்கு ஒரு ஏக்கருக்கு 4 கிலோ டி.ஏ.பி. போதுமானது.

÷டி.ஏ.பி. 4 கிலோவினை முதல் நாள் நீரில் கரைத்து ஊற வைத்து, அடுத்த நாள் வடிகட்டி, கைத்தெளிப்பான் கொண்டு ஏக்கருக்கு 16 டேங்க் அடிக்க வேண்டும்.

÷உளுந்து பயிர் விதைத்து 25-ம் நாள் ஒரு முறையும், 35-ம் நாள் ஒரு முறையும் இரு முறையும் தெளிக்க வேண்டும். இப்படி தெளிப்பதால் ஏக்கருக்கு 25 சதவீதம் கூடுதல் மகசூல் பெறலாம்.

## மக்காச் சோளம் சாகுபடி பயிற்சி

காமாட்சிபுரத்தில் சென்டெக்ட் வேளாண்மை அறிவியல் மையம், தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகம் ஆகியவை சார்பில் மக்காச் சோளம் சாகுபடி தொழில்நுட்ப பயிற்சி மற்றும் இடு பொருள்கள் வழங்கும் விழா நடைபெற்றது.

சென்டெக்ட் மைய தலைவர் பெ. பச்சைமால் தலைமை வகித்தார். திட்ட ஒருங்கிணைப்பாளர் மாரிமுத்து முன்னிலை வகித்தார். மாற்றுத் திறனாளிகள் மறுவாழ்வு திட்ட ஒருங்கிணைப்பாளர் கார்த்திகேயன் வரவேற்றார். ஓடைப்பட்டி, குப்பிநாயக்கன்பட்டி, வெங்கடாச்சலபுரம், ஜங்கால்பட்டி, எரசை, சீப்பாலகோட்டை, எல்லப்பட்டி, தர்மாபுரி, பூலானந்தபுரம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள் கலந்து கொண்டனர். மலர்க்கொடி நன்றி கூறினார்..

## 100 நாள் வேலை திட்டத்தில் பணிகள்: விவசாயிகளுக்கு வேளாண் துறை அழைப்பு

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ் விவசாயிகள் தங்கள் நிலப் பகுதியில் பணிகளை நிறைவேற்றிக்கொள்ள செய்யாறு வட்டார விவசாயிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து செய்யாறு வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் ஏ.எம்.சாந்தி வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

100 நாள் வேலை திட்டத்தில் சிறு, குறு மற்றும் ஆதிதிராவிட விவசாயிகளின் நிலங்களில் குறிப்பிட்ட விவசாயப் பணிகளை மேற்கொள்ள அரசு உத்தரவிட்டுள்ளது.

இதன்பேரில், விவசாயிகளின் நிலத்துப் பகுதியில் கால்வாய் தூர்வாருதல், கசிவுநீர் குட்டை, கசியாத நீர்குட்டை, பண்ணை குட்டைகள் அமைத்தல், நிலத்தை சமன்படுத்துதல், வன விலங்குகளால் ஏற்படும் சேதத்தை தடுக்கத் தேவையான தடுப்புச் சுவர் அமைத்தல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன.

வரும் ஜனவரி 26-ம் தேதி அனைத்து கிராமங்களிலும் நடைபெறும் சிறப்பு கிராம சபைக் கூட்டத்தில், 100 நாள் வேலை திட்டப் பணிகளை மேற்கொள்வதற்கு தீர்மானம் நிறைவேற்றப்படவுள்ளது. இதில் விவசாயிகளுக்கான பணிகளை மேற்கொள்வதற்கு வேளாண்மைத் துறையை அணுகி பயன் பெறலாம் என்று தெரிவித்துள்ளார்.

## தக்காளியில் இலைக் கருகல் நோய் மேலாண்மை



கிருஷ்ணகிரி மாவட்டத்தில் சுமார் 2500 ஹெக்டரில் தக்காளிப் பயிர் சாகுபடி செய்யப்படுகிறது. தற்போது நிலவும் சீதோஷ்ண நிலையால் தக்காளியில் முன் பருவத்து இலைக் கருகல் நோய் ஏற்பட அதிக அளவு வாய்ப்புள்ளது.

இந்த நோயின் அறிகுறிகள், அதைக் கட்டுப்படுத்தும் வழிமுறைகள் குறித்து டாக்டர் பெருமாள் வேளாண்மை அறிவியல் மையத் திட்ட ஒருங்கிணைப்பாளர் டி.சுந்தர்ராஜ் கூறியது:

தக்காளியில் முன் பருவத்து இலைக் கருகல் நோய் காற்றில் அதிக அளவு ஈரப்பதம், அடிக்கடி மழைத் தூறல், அதைத்தொடர்ந்து அதிகமான வெப்ப நிலை, அதிகமான வறட்சி ஆகியவற்றால் இந்த நோய் வேகமாகப் பரவுவதுடன், நோயின் தீவிரம் அதிகமாகும். இந்த நோய் தாக்கத்தால் சுமார் 40 சதம் வரை மகசூல் பாதிக்கும். இந்த நோயானது, தக்காளி மட்டுமல்லாது மிளகாய், உருளைக் கிழங்கு போன்ற பயிர்களையும் தாக்கும்.

நோயின் அறிகுறிகள்: இலைகளில் அறிகுறி முதலில் சிறிய தனித் தனிப் புள்ளிகளாக, மங்கிய பழுப்பு நிறத்தில் தோன்றும். புள்ளிகளின் மேல்பரப்பில் பச்சை கலந்த நீல நிறத்தில் பூசண வளர்ச்சி தோன்றும். செடியின் அடிப்பாகத்திலுள்ள முதிர்ந்த இலைகள் முதலில் தாக்கப்பட்டு பின்னர், மேல்பகுதியிலுள்ள இளம் இலைகளும் தாக்கப்படும். புள்ளிகளின் நடுவிலுள்ள கரிந்த பகுதி, ஒரே மையப்புள்ளியைக் கொண்ட பல வளையங்களைக் கொண்ட தோற்றத்தை அளிப்பதுதான் இந்த நோயின் முக்கிய அறிகுறியாகும்.

மேலும், புள்ளிகளைச் சுற்றி ஒரு மெல்லிய, இளம் மஞ்சள் நிற வளையம் தென்படும். புள்ளிகள் விரிவடையும் போது, இந்த மஞ்சள் நிற வளையமும் விரிவடையும். ஓர் இலையில் சில புள்ளிகள் மட்டுமே காணப்படும். சில வேளைகளில் பல புள்ளிகள் தோன்றி இலையின் பெரும்பகுதி தாக்கப்பட்டு விடும். புள்ளிகள் இலையின் நடு நரம்புப் பகுதியைத் தாக்கும் போது, மஞ்சள் நிற வளையம் அதிக அளவில் பரவிக் காணப்படும்.

வறட்சி அதிகமாகக் காணப்படும் காலங்களில், புள்ளிகள் கடினத் தன்மையுடன் மாறுவதுடன், இலைகள் நெளிந்தும், சுருண்டும் தென்படும். ஈரப்பதம் அதிகமாக இருக்கும் போது, புள்ளிகள் விரிவடைந்து ஒன்றோடொன்று இணைந்து அழுகத் துவங்கி, நோயின் தீவிரம் அதிகமாகும் போது, இலைகள் முழுவதும் மஞ்சள் நிறமாக மாறி, சுருங்கி, வாடி உதிர்ந்துவிடும். தண்டுப் பகுதிகளும் தாக்கப்பட்டு, பழுப்பு அல்லது கருமை நிற உள் புள்ளிகள் தோன்றி, கிளைகள் அல்லது செடி முழுவதுமே கரிந்து மடிந்துவிடும்.

கட்டுப்படுத்தும் வழிமுறைகள்: தக்காளியின் முன் பருவத்து இலைக் கருகல் நோயைக் கட்டுப்படுத்த, ஒரு லிட்டர் தண்ணீருக்கு காப்பர் ஆக்ஸி குளோரைடு 0.3 சதம் அல்லது குளோரோதலோனில் 0.2 சதம் அல்லது புரோப்பிநெப் அல்லது மெட்டிராம் 0.2 சதம் அல்லது பினோமில் 0.3 சதம் ஆகியவற்றில் ஏதாவது ஒன்றைத் தெளிப்பதன் மூலம் நோயைக் கட்டுப்படுத்தலாம். இவ்வாறு பின்பற்றுவதன் மூலம் இலைக் கருகல் நோயைக் கட்டுப்படுத்தி, அதிக மகசூலைப் பெறலாம்.

தொடர்புக்கு: டாக்டர் பெருமாள் அறிவியல் மையம், எலுமிச்சங்கிரி, கிருஷ்ணகிரி, தொலைபேசி 04343-296039.

## பருத்தி அறுவடைக்குப் பிந்தைய தொழில்நுட்பம்



தருமபுரி மாவட்டத்தில் தற்போது பருத்தி அறுவடை பணி நடைபெற்று வருகிறது.

அறுவடை செய்த பருத்தியை தொழில்நுட்ப உதவியுடன் பராமரிப்பதன் மூலம் விவசாயிகள் கூடுதல் வருவாயை ஈட்டலாம் என்று வேளாண் வணிகத்தின் வேளாணைமை துணை இயக்குநர் இ.செல்வம் தெரிவித்தார்.

இந்த மாவட்டத்தில் பென்னாகரம், பாப்பாரப்பட்டி, காரிமங்கலம், பாலக்கோடு, அரூர், பாப்பிரெட்டிப்பட்டி, கடத்தூர், பொம்மிடி போன்ற இடங்களில் சுமார் 12 ஆயிரம் ஹெக்டேர் பரப்பளவில் பருத்தி சாகுபடி செய்யப்படுகிறது.

தற்போது மாவட்டத்தில் பருத்தி அறுவடை செய்யும் பணியில் விவசாயிகள் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

பருத்தியின் சிறப்புத் தன்மைகளான நிறம், சுத்தம்,மென்மை, குறைவான ஈரம் ஆகிய நான்கு தன்மைகளைப் பொருத்தே அதன் விலை அமைகிறது. மேற்கண்ட நான்கு தன்மைகளைப் பெற

அறுவடைக்கு பிந்தைய தொழில்நுட்பங்களை கடைபிடிப்பதன் மூலம் பருத்திக்கு கூடுதல் விலை கிடைக்கும்.

தொழில்நுட்பங்கள்:

வெடித்து நன்கு மலர்ந்த பருத்தியை மட்டும் செடியிலிருந்து அறுவடை செய்ய வேண்டும். மூன்று அல்லது நான்கு நாள்களுக்கு ஒரு முறை பருத்தியை அறுவடை செய்ய வேண்டும். பருத்தியை காலை நேரத்தில் சேகரம் செய்வது சிறந்தது. இதனால், காய்ந்த இலை, சருகுகள் பருத்தியில் ஒட்டாது.

அவற்றை நிழலில், மணல் பரப்பிய களங்களில் உலர்த்த வேண்டும். நேரடி வெயிலில் பருத்தியை உலரப் போட்டால் பஞ்சின் நிறம் குறைவது மட்டுமல்லாமல் அதன் மென்மைத் தன்மையும் பாதிக்கும். பருத்தியை ரகம் வாரியாக தனித்தனியே சேமிக்க வேண்டும்.

பருத்தி நன்கு உலர்த்திய பிறகு அதில் கலந்துள்ள இலைச் சருகுகள், காய்ந்த சப்பைத் துண்டுகள், பூச்சி நோய்த் தாக்கியது ஆகியவற்றை தனியாகப் பிரிந்து தரத்தை மேம்படுத்த வேண்டும். பருத்தியை காற்றோட்டமான அறைகளில் மணல் பரப்பிய தரையில் சேமிக்க வேண்டும்.

இவ்வாறு அறுவடைக்குப் பிந்தைய தொழில்நுட்பங்களை பின்பற்றி பருத்தியை பராமரிப்பதன் மூலம் விவசாயிகளுக்கு ஹெக்டேருக்கு ரூ.15 ஆயிரம் முதல் 20 ஆயிரம் வரை கூடுதல் வருவாய் கிடைக்க வாய்ப்புள்ளது.

மேலும் விவரங்களுக்கு வேளாண் வணிகத்தின் தருமபுரி கோட்ட வேளாண்மை அலுவலரான தா.தாம்சனை 94435 63977 என்ற செல்போன் எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

## சூரியகாந்தி விதைப்பு: விவசாயிகளுக்கு ஆலோசனை



விவசாயிகள் சூரியகாந்தி விதைப்பு முடிவு எடுப்பது தொடர்பாக வேளாண் விற்பனை மற்றும் வணிகத்துறை சார்பில் அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

இது குறித்து கடலூர் வேளாண்மை துணை இயக்குநர் மா.சண்முகம் மற்றும் விருத்தாசலம் கோட்ட வேளாண்மை அலுவலர் ச.அமுதா ஆகியோர் கூட்டாக வெளியிட்டுள்ள அறிக்கை:

சூரியகாந்தி உலகம் முழுவதும் பயன்படுத்தப்படும் உயர்ந்த சமையல் தாவர எண்ணெய் விதைகளில் ஒன்றாகும். உலகளவில் 2011-12இல் மொத்த சூரியகாந்தி உற்பத்தி 39.15 மில்லியன் டன்களாகும்.

2010-2011இல் இதன் உற்பத்தி 35.4 மில்லியன் டன்களாகும். சூரியகாந்தி உற்பத்தியில் உக்ரைன், ரஷியா, ஆர்ஜெண்டினா, சீனா, துருக்கி, அமெரிக்கா, ஸ்பெயின் மற்றும் இந்தியா உள்ளிட்ட நாடுகள் முக்கியப் பங்கு வகிக்கின்றன. இந்தியாவில் 2010-11இல் ஆண்டு ரபி பருவத்தில் சூரியகாந்தி விதை உற்பத்தி 5.20 லட்சம் டன்கள் ஆகும். ரபி 2011-12இல் 5 லட்சம் டன்கள் எதிர்பார்க்கப்படுகிறது. கர்நாடகம், ஆந்திரம் மற்றும் மகாராஷ்டிரம் ஆகிய மாநிலங்கள் சூரியகாந்தி உற்பத்தியில் முக்கியப் பங்கு வகிக்கின்றன.

தமிழகத்தில் 2009-10ஆம் ஆண்டு 14 ஆயிரம் ஹெக்டேரில் சூரியகாந்தி பயிரிடப்பட்டு அதன் உற்பத்தி 18 ஆயிரம் டன்களாகவும், உற்பத்தித் திறன் ஹெக்டேருக்கு 1330 கிலோவாகவும் உள்ளன.

கரூர், தூத்துக்குடி, திருச்சி, தருமபுரி, விருதுநகர், திண்டுக்கல், திருநெல்வேலி, திருவண்ணாமலை மற்றும் நாமக்கல் ஆகிய மாவட்டங்கள் தமிழகத்தில் 82 சதவீதம் உற்பத்தியை அளிக்கின்றன.

தமிழகத்தில் பரவலாக தை மற்றும் சித்திரைப் பட்டம் ஒரு சில இடங்களில் கார்த்திகைப் பட்டத்திலும் சூரியகாந்தி சாகுபடி செய்யப்படுகிறது.

பொதுவாக டிசம்பர் மாதத்தில் கார்த்திகைப் பட்டப்பயிர் விதைக்கப்படுகிறது.

இந்திய எண்ணெய் பிழிவோர் சங்கத்தின் ஆய்வு அறிக்கையின்படி 2012ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் 1.04 மில்லியன் டன், முந்தைய மாதத்தில் 9.9 லட்சம் டன் தாவர எண்ணெய் இந்தியாவில் இறக்குமதி செய்யப்பட்டது.

வரும் 2012-2013ஆம் ஆண்டில் 7.8 மில்லியன் டன் பாமாயில், 1.20 டன் சோயா எண்ணெய் மற்றும் 1 மில்லியன் டன் சூரியகாந்தி எண்ணெய் இறக்குமதி செய்யப்படும் என இறக்குமதி முன் அறிவிப்பு தெரிவிக்கிறது.

சூரியகாந்தி விதைப்பு முடிவுகளை விவசாயிகள் மேற்கொள்வதற்காக தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் உள்ள வேளாண்மை மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தில் இயங்கி வரும் தேசிய வேளாண் புதுமைத் திட்டத்தின் உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையமானது, வெள்ளக்கோவில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் சென்ற 12 ஆண்டுகளாக நிலவிய சூரியகாந்தி விதையின் விலைகளை ஆராய்ந்து, மார்ச்-ஏப்ரல் 2013இல் ஒரு கிலோவுக்கு ரூ.33 முதல் ரூ.36 வரை இருக்கும் என ஆராய்ச்சி முடிவுகள் வெளிப்படுத்தியுள்ளன.

இந்த விலையின் அடிப்படையில் விவசாயிகள் விதைப்பு முடிவுகளை எடுக்குமாறு பரிந்துரைக்கப்படுகிறது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் விவரங்களுக்கு: உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம், வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோவை-641003. தொலைபேசி: 0422-2431405.

தொழில்நுட்ப விவரங்களுக்கு: பேராசிரியர் மற்றும் தலைவர், எண்ணெய் வித்துக்கள் துறை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோவை-641003. தொலைபேசி: 0422-2450812.

தினமலர்

இன்றைய வேளாண் செய்திகள்

11.01.2013 A.M

## விவசாயம் பாதித்த பகுதிகள் அமைச்சர் குழுவினர் ஆய்வு

வேதாரண்யம்: டெல்டா மாவட்டங்களில் போதிய தண்ணீர் இல்லாமல், விவசாயம் பாதிக்கப்பட்ட பகுதிகளை அமைச்சர்கள் கொண்ட உயர்மட்ட குழுவினர் ஆய்வு செய்தனர். தமிழக நிதியமைச்சர் பன்னீர்செல்வம் தலைமையில், அமைச்சர்கள் மற்றும் ஐ.ஏ.எஸ்., அதிகாரிகள் கொண்ட உயர்மட்ட குழுவினர், டெல்டா மாவட்டங்களில் கருகிய நெற்பயிர்களை நேற்று முதல் ஆய்வு செய்து வருகின்றனர்.

நாகை மற்றும் திருவாரூர் மாவட்டங்களில் நேற்று உயர்மட்ட குழுவினர் வயல்வெளிகளில் ஆய்வு செய்தனர். அவர்களுடன், நாகை கலெக்டர் முனுசாமி, திருவாரூர் கலெக்டர் நடராஜன், மயிலாடுதுறை எம்.பி., மணியன், எம்.எல்.ஏ.,க்கள் வேதாரண்யம் காமராஜ், பூம்புகார் பவுன்ராஜ், சீர்காழி சக்தி ஆகியோர் சென்றனர்.

நாகை மாவட்டம் காளியப்பநல்லூர், தரங்கம்பாடி, பெட்டி, ஈசனூர், புத்தூர், நீர்முலை, அருந்தபுலம், மணக்குடி மற்றும் வாய்மேடு ஆகிய பகுதிகளில் பாதிக்கப்பட்ட பயிர்களை பார்வையிட்டனர். அங்குள்ள விவசாயிகளிடம் நிதியமைச்சர் பன்னீர்செல்வம் பயிர் பாதிப்பு குறித்து கேட்டறிந்தார்.

தொடர்ந்து அவர் கூறியதாவது: பயிர் சேதம் குறித்த அறிக்கையினை தமிழக முதல்வரிடம் விரைவில் சமர்ப்பிக்க உள்ளோம். பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு உரிய நிவாரணம் வழங்கப்படும்.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## ஆவின் நிறுவனத்திற்கு கூடுதல் பால் கொள்முதல் மையம்: குழு உறுதி

திண்டுக்கல் : திண்டுக்கல்லில் கூடுதலாக 30 ஆயிரம் லிட்டர் கொள்முதல் மையம் அமைக்க ஆவின் நிறுவனத்தின் கோரிக்கையை ஏற்று, விரைவில் அமைத்துதர நடவடிக்கை எடுப்பதாக சட்சபை உறுதிமொழிக்குழுவினர் உறுதியளித்தனர்.

திண்டுக்கல்மாவட்டத்தில், சட்டசபை உறுதி மொழிக் குழுவினர், எம்.எல்.ஏ., உதயக்குமார்

தலைமையில் பல்வேறு பணிகளை ஆய்வு

நடத்தினர். எம்.எல்.ஏ.,க்கள்,

அன்பழகன், அசலாம்பாட்சா,

குமரகுரு, பூனாட்சி, போஸ்,

மதேஸ்வரன் ஆகியோர் இடம்

பெற்றிருந்தனர். இவர்கள் திண்டுக்கல் ஆவின் பால் குளிரூட்டும் நிலையத்தை ஆய்வு செய்தனர். ஆவின் அதிகாரிகள் உறுதிமொழிக்குழுவில் விடுத்த கோரிக்கையில், திண்டுக்கல் மாவட்டத்தில் 48 ஆயிரம் லிட்டர் பால் கொள்முதல் செய்யப்படுகிறது. இதில் 14 ஆயிரம் லிட்டர் பால் கால், அரை, ஒரு

லிட்டர் பாக்கெட்டுகளில் அடைக்கப்பட்டு விற்கப்படுகிறது. மீதியுள்ள நான்காயிரம் லிட்டர் பால், நெய், பால்கோவா, பால் பவுடராக மாற்றப்படுகிறது.

30 ஆயிரம் லிட்டர் பால் சென்னை, கேரளாவுக்கு விற்பனைக்கு அனுப்பி வைக்கப்படுகிறது.

தற்போது 30 ஆயிரம் லிட்டர் கொள்ளளவு கொண்ட பால் தொட்டி உள்ளது.

இது பற்றாக்குறையாக உள்ளது. மேலும் 30 ஆயிரம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மற்றொரு தொட்டி அமைக்கவேண்டும். ஆவின் நிர்வாகத்திற்கு 5 ஏக்கர் நிலம் தேவைப்படுகிறது. இதையும் தேர்வு செய்து தருமாறு தெரிவித்தனர்.

இதற்கு உறுதி மொழிக்

குழுவினர், கலெக்டர்மூலம் நடவடிக்கை எடுப்பதாக உறுதி அளித்தனர். ஆய்வின் போது, கலெக்டர் வெங்கடாசலம், ஆவின் பொது மேலாளர் லட்சுமணபிள்ளை, துணை பதிவாளர் சித்ராதேவி

உட்பட பலர் உடன்இருந்தனர்.

**சாகுபடி பரப்பு 12 ஆயிரத்து 300 எக்டேர் மானியம் வழங்கியது 230 எக்டேருக்கு**

தேனி : தேனி மாவட்டத்தில், 12 ஆயிரத்து 300 எக்டேருக்கும் மேற்பட்ட பரப்பில், பயறு வகைகள் சாகுபடி நடந்து வரும் நிலையில், அரசு 230 எக்டேருக்கு மட்டும் மானியம் வழங்கி உள்ளது. மாவட்டத்தில் உளுந்து, பாசிப்பயறு, தட்டாம்பயறு, துவரை உட்பட பயறு வகைகள் 12 ஆயிரத்து 300 எக்டேருக்கும் அதிக பரப்பில் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. பயறு வகை சாகுபடி செய்த விவசாயிகள், பூக்கும் பருவத்தில் டி.ஏ.பி., இரண்டு சதவீத கரைசலை தெளிக்க வேண்டும். தொடர்ந்து 15 நாட்கள் கழித்து மீண்டும் இந்த கரைசலை தெளிக்க வேண்டும்.

தற்போது டி.ஏ.பி., உரம் மூன்று மடங்கிற்கு மேல் விலை உயர்ந்து, மூடை 1202 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. இதனால் தேசிய விவசாய வளர்ச்சி திட்டத்தில், விவசாயிகளுக்கு 50 சதவீத மானியத்தில், டி.ஏ.பி., உரம் வழங்க அரசு நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.
இத்திட்டத்தில், தேனி மாவட்டத்தில் 230 எக்டேருக்கு மட்டும் டி.ஏ.பி., உரம் 50 சதவீத மானியத்தில் வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது.
அதுவும் ஒரு எக்டேருக்கு 25 கிலோ டி.ஏ.பி., உரம் மட்டுமே ஒரு விவசாயிக்கு வழங்கப்படும். இதனால் 230 விவசாயிகள் மட்டுமே மானிய உதவிகள் பெற முடியும். எனவே இத்திட்டம் பற்றி வெளிப்படையாக அறிவித்தால், அதிக எண்ணிக்கையில் விவசாயிகள் வருவார்கள். பயனாளிகளை தேர்வு செய்ய முடியாது என்பதால், விவசாயத்துறை இத்திட்டம் பற்றி வெளிப்படையாக அறிவிக்காமல் செயல்படுத்தி வருகிறது.

## கருகிய நெல்லுக்கு நிவாரணம் ஒன்றியக்கவுன்சில் தீர்மானம்

ஆர்.எஸ்.மங்கலம் : ஆர்.எஸ்.மங்கலம் ஒன்றியத்தை, வறட்சி பாதித்த பகுதியாக அறிவித்து அரசு நிவாரணம் வழங்க கவுன்சில் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.ஆர்.எஸ்.மங்கலம் ஊராட்சி ஒன்றியக்குழு கூட்டம், தலைவர் ஆனந்த் தலைமையில் நடந்தது. துணைத்தலைவர் அம்மாளு, பி.டி.ஓ., காந்தி, முன்னிலை வகித்தனர். கூட்ட விவாதம்.ராஜபாண்டி (அ.தி.மு.க.,): கோவிந்தமங்கலம் ரேஷன் கடைக்காக புதிய கட்டடம் கட்ட வேண்டும்.மணிமாறன் (அ.தி.மு.க.,): எம்.எல்.ஏ., நிதியில், வரவணியில் நிழற்குடை அமைக்க கடந்தாண்டு 3 லட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டும், பணி கிடப்பில் உள்ளது.உதவி பொறியாளர் சுந்தரம்: இடம் தேர்வு செய்ததில் பிரச்னை உள்ளது.இலக்குவன்(அ.தி.மு.க.,): பருவ மழை ஏமாற்றத்தால் ஆர்.எஸ்.மங்கலம் ஒன்றிய பகுதியில் நெல் பயிர்கள் கருகிவிட்டன நிவாரணம் வழங்க வேண்டும்.தலைவர்: நிழற்குடை அமைப்பது உட்பட பல பிரச்னைகள் தீர்க்கப்படும். வறட்சி பகுதியாக ஆர்.எஸ்.மங்கலத்தை அறிவித்து, டெல்டா விவசாயிகளுக்கு வழங்குவது போல, நிவாரணம், காப்பீடு தொகை வழங்க கோரி, அரசின் கவனத்திற்கு கொண்டுசெல்லப்படும். இதற்கு அனைத்து கவுன்சிலர்களும் ஆதரவு தெரிவித்ததால், தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

## களக்காடு வடக்கு பச்சையாறு அணை திறப்பு

நான்குநேரி:களக்காடு வடக்கு பச்சையாறு அணை திறக்கப்பட்டது.

வடக்கு பச்சையாறு அணை பாசனத்திற்காக திறக்கப்பட்டது. கலெக்டர் சமயமூர்த்தி அணையை

திறந்து வைத்தார். நிகழ்ச்சியில் அதிமுக மாவட்ட கவுன்சிலர் ராஜேந்திரன், ஒன்றிய அதிமுக செயலாளர் ஜெயராமன், முன்னாள் ஒன்றிய செயலாளர் வேலுச்சாமி, நகர செயலாளர் இஸ்மாயில், யூனியன் கவுன்சிலர் காந்திநம்பி, ஆசிரியர் செல்வராஜ், நாராயணன், இளங்கோ, நம்பி, முருகேசன், திருமலைநம்பி, விவசாய சங்க தலைவர்கள் பெரும்படையார், அய்யம்பெருமாள் உட்பட விவசாய சங்க நிர்வாகிகள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், அரசு அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

## தென்காசியில் பனை ஓலை விற்பனை ஜோர்

தென்காசி:தென்காசி பகுதியில் பொங்கலையொட்டி பனை ஓலை விற்பனை சூடுபிடித்துள்ளது.

தமிழர் திருநாளாம் பொங்கல் பண்டிகை வரும் 14ம் தேதி கொண்டாடப்படுகிறது. பொதுமக்கள் அனைவரும் வீட்டின் முன் அல்லது கோயில்களில் பொங்கலிட்டு வழிபாடு நடத்துவர்.

இதற்காக பொங்கல் பொருட்கள் விற்பனை விறுவிறுப்படைந்து வருகிறது. தென்காசி மற்றும் அதன் சுற்று வட்டார பகுதியில் பனை மரங்கள் அதிகளவில் உள்ளன. இம்மரங்களில் உள்ள ஓலைகள் வெட்டப்பட்டு வெயிலில் காய வைக்கப்பட்டு ஒவ்வொரு கட்டாக கட்டி பொங்கலுக்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

பொதுமக்கள் பொங்கலிட அடுப்பு எரிப்பதற்கு பனை ஓலையைத்தான் பயன்படுத்துவர். இதனால் தென்காசி, மேலகரம் பகுதியில் பனையோலை கட்டு கட்டாக குவிக்கப்பட்டு விற்பனை செய்யப்படுகிறது.

ஒரு கட்டு பனை ஓலை 30 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது. இவற்றை பொதுமக்கள் ஆர்வத்துடன் வாங்கிச் செல்கின்றனர்.

மேலும் மண் பானை 40 ரூபாயிலிருந்து தரத்திற்கு தகுந்தாற் போல் விற்பனை செய்யப்படுகிறது. பனங்கிழங்கு கட்டு ஒன்றுக்கு 40 ரூபாய் முதல் 50 ரூபாய் வரைக்கும், மஞ்சள் குலை 25 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. காய்கறிகள் விற்பனையும் சூடுபிடித்துள்ளது.

## தேயிலை நாற்றுகள் தேக்கம்: உற்பத்தியாளர்கள் சோகம்

கூடலூர் : கூடலூர், நாடுகாணி, பொன்னூர் பகுதியில் உற்பத்தி செய்யப்பட்ட தேயிலை நாற்றுகள் விற்பனையாகாததால், தேயிலை நாற்று உற்பத்தியாளர்கள் நஷ்டத்தை சந்தித்து வருகின்றனர்.

கூடலூர் பகுதியில் எஸ்டேட் மற்றும் சிறு விவசாயிகளுக்கு தேவையான தேயிலை நாற்றுகள் நாடுகாணி, பொன்னூர், பொன்வயல், கைதகொல்லியில் உற்பத்தி செய்யப்பட்டு, விற்பனைக்கு வைக்கப்படுகின்றன. இத்தொழிலில் ஏராளமான சிறு விவசாயிகள் ஈடுப்பட்டுள்ளனர்.

இங்கு உற்பத்தி செய்யப்படும், தேயிலை நாற்றுக்கள் உள்ளூரில் மட்டுமல்லாமல், கேரளா மாநிலம் மானந்தவாடி விவசாயிகளுக்கும் வினியோகம் செய்யப்படுகிறது. கடந்த 2011 ஆண்டு ஒரு நாற்று 4.50 முதல் 6.00 ரூபாய் வரை விற்பனை செய்யப்பட்டது. நடப்பாண்டில் உற்பத்தி செய்யப்பட்ட தேயிலை நாற்றுகள் விற்பனையாகாமல், தேக்கமடைந்து உள்ளன. இதனால், சிறு விவசாயிகளுக்கு நஷ்டம் ஏற்படும் அபாயம் உள்ளது.

இது குறித்து நாற்று உற்பத்தியாளர்கள் கூறும் போது, "கடந்த ஆண்டு கேரள விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட மானியம் நிறுத்தப்பட்டதாலும், பருவ மழை குறைவினாலும், தேயிலை நாற்றுகள் பெருமளவில் விற்பனை ஆகாமல் தேங்கி விட்டன. இதனால் நஷ்டம் ஏற்பட்டுள்ளது.உற்பத்தியாளர்களும், இதனை சார்ந்த தொழிலாளர்களும் வருமானம் இன்றி பாதிக்கப்பட்டுள்ளனர். வேலையிழந்துள்ள இப்பகுதியினருக்கு, பொன்னூர் அரசு தோட்டக்கலை பண்ணையில் வேலை வழங்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்' என்றனர்.

## தேயிலை ஏலத்தில் முன்னேற்றம்

குன்னூர் : குன்னூரில் நடந்த தேயிலை ஏலத்தில் 98 சதவீத தேயிலை விற்பனையானது.

குன்னூர் கூட்டுறவு தேயிலை ஏல மையத்தின் இரண்டாம் ஏலம் கடந்த 9ம் தேதி நடந்தது. இதில் மொத்தம் 5 லட்சத்து 9 ஆயிரத்து 501 கிலோ தேயிலை தூள் விற்பனைக்கு வந்தது.

இதில், இலை ரகம் 2 லட்சத்து 88 ஆயிரத்து 727 கிலோவும், டஸ்ட் ரகம் 2 லட்சத்து 9 ஆயிரத்து 515 கிலோவும் என 98 சதவீத தூள் விற்பனையானது.

சராசரியாக இலை ரகத்துக்கு கிலோ ஒன்றுக்கு 99.43 ரூபாயும், டஸ்ட் ரகத்துக்கு கிலோ ஒன்று 98.39 ரூபாய் விலை கிடைத்தது. இலை ரகத்தில் சாதாரண ரகம் 90-95 ரூபாயும், உயர் ரகம் 120-127 ரூபாய் வரையிலும், டஸ்ட் ரகத்தில் சாதாரண ரகம் 92 முதல் 96 ரூபாய் வரையிலும், உயர் ரகம் 115 ரூபாய் முதல் 121 ரூபாய் வரையிலும் விலை போனது. அனைத்து ரகத்துக்கு 2 ரூபாய் விலை ஏற்றம் காணப்பட்டது.

அதிகபட்சமாக பந்தலூர் இன்கோ தேயிலை தொழிற்சாலைக்கு 127 ரூபாயும், டஸ்ட் ரகத்தில் அதிகபட்சமாக மஞ்சூர் கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைக்கு 121 ரூபாய் விலை கிடைத்தது. அடுத்த ஏலம் வரும் 16ம் தேதி நடக்கிறது. இதில், 4.69 லட்சம் கிலோ தேயிலை தூள் விற்பனைக்கு தயாராக உள்ளது.

## தேயிலைக்கு சந்தை விலை: ஊட்டியில் ஆலோசனை கூட்டம்: சிறு விவசாய அமைப்புகள் சார்பில் தீர்மானம்

ஊட்டி : நீலகிரி பசுந்தேயிலைக்கு உண்மையான சந்தை விலை வழங்கும் விவகாரம் தொடர்பாக, விவசாயிகள் மட்டத்தில், பல கட்ட ஆலோசனைக் கூட்டம் நடத்தப்பட்டது. நீலகிரியில், சிறு தேயிலை விவசாயிகள் வழங்கும் பசுந்தேயிலைக்கு குறைந்தபட்ச விலை நிர்ணயம் செய்ய வேண்டும் என, "நெலிகோலு' அறக்கட்டளை நிர்வாக அறங்காவலர் தர்மன், கோத்தகிரி போஜன் ஆகியோர், கடந்த 2008ல், சென்னை ஐகோர்ட்டில் மனு தாக்கல் செய்தனர்.

கடந்தாண்டு, அக்., 12ம் தேதி வழங்கப்பட்ட தீர்ப்பில், "சிறு தேயிலை விவசாயிகளுக்கு நிரந்தர பயன் மற்றும் அவர்களின் வாழ்வாதார நிலை கருதி, நீலகிரி பசுந்தேயிலைக்கு உரிய உண்மையான சந்தை விலை கிடைக்க வழிவகை செய்ய வேண்டும்' என, மத்திய அரசுக்கு, ஐகோர்ட் உத்தரவிட்டது.

விவகாரம் குறித்து முடிவெடுக்க, மத்திய அரசு, தேயிலை வாரியம் மூலம், இந்திய தோட்ட மேலாண்மை கல்வி நிறுவனத்தினர், தேயிலை தொழில் சார்ந்தோர் மத்தியில் இன்று, குன்னூரில் ஆலோசனைக் கூட்டம் நடத்தவுள்ளனர்.

விவசாயிகள் கூட்டம்

இதற்கிடையில், மாவட்டத்தில் உள்ள சிறு தேயிலை விவசாய அமைப்புகளை ஒருங்கிணைத்து, கடந்த மூன்று நாட்களாக, ஊட்டி என்.சி.எம்.எஸ்., இளம்படகர் நல சங்க கட்டடம், ஊட்டி சேரிங்கிராஸ் தோட்டக்கலை வளாகத்தில் கூட்டம் நடத்தப்பட்டு, பல விவாதங்களுக்கு பின் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

அதில், "மாவட்டத்தில் 1 லட்சம் ஏக்கர் பரப்பளவில் தேயிலை சாகுபடியாகிறது; 60 ஆயிரம் சிறு தேயிலை விவசாயிகள், 2 லட்சம் தொழிலாளர்கள், 150 தொழிற்சாலைகள், 250 தேயிலை வர்த்தகர்கள், ஏற்றுமதியாளர்கள் நேரடியாக தேயிலை தொழிலில் ஈடுபட்டுள்ளனர்.

தொழில் லாபகரமாக உள்ளது; தொழிற்சாலைகளில் உற்பத்தியாகும் தேயிலை தூள் நல்ல விலைக்கு விற்கப்படுகிறது. ஆனால், பிரதான கச்சாப் பொருளான பசுந்தேயிலைக்கு உரிய விலை கிடைப்பதில்லை.

ஐகோர்ட் உத்தரவுப்படி, பசுந்தேயிலைக்கு உண்டான சந்தை விலை கிடைக்கவும், ஒரு கிலோ பசுந்தேயிலைக்கு 40 ரூபாய்க்கு மேல் விலை கிடைக்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டும். மாவட்டத்தில், தேயிலை தொழிலை மேம்படுத்த ஒழுங்கு முறை வணிகம், பெரும்பாலான சிறு தேயிலை விவசாயிகளை உள்ளடக்கி, சிறு தேயிலை வணிக ஒழுங்குமுறை விலை நிர்ணய குழுவை ஏற்படுத்த வேண்டும்' என கூறப்பட்டுள்ளது.

"நெலிகோலு' அறக்கட்டளை ஆலோசனைக் குழு உறுப்பினர் சிவன் கூறுகையில், ""சிறு தேயிலை விவசாயிகள் நலன் கருதி நிறைவேற்றப்பட்டுள்ள இத்தீர்மானம், குன்னூர் கூட்டத்தில் வழங்கப்பட உள்ளது," என்றார்.

## வியப்பை ஏற்படுத்திய முள்ளங்கி

ஊட்டி : ஊட்டி அருகே விளைந்த ராட்சத முள்ளங்கி, வியப்பை ஏற்படுத்தியது. ஊட்டி மேல் கோடப்பமந்து பகுதியில் வசிப்பவர் லட்சுமணன்; விவசாயி. இவரது தோட்டத்தில் முள்ளங்கி, கேரட் பயிரிடப்பட்டுள்ளது. இவர் சாகுபடி செய்துள்ள வெள்ளை முள்ளங்கி, வழக்கத்தை காட்டிலும் பெரிதாக வளர்ந்துள்ளது. பொதுவாக, ஒரு அடிக்கு குறைவான உயரத்தில் வளரும் முள்ளங்கி, இவரது தோட்டத்தில், ஒரு முள்ளங்கி 2 அடி நீளம் வரை வளர்ந்து, ஒன்றரை கிலோ எடை வரை உள்ளது. லட்சுமணன் கூறுகையில், ""தோட்டத்தில் விளைவித்த முள்ளங்கிக்கு போதிய நீர் கிடைக்கவில்லை; சாதாரண மருந்து தான் தெளித்தேன். விளைந்த அனைத்து முள்ளங்கிகளும், மிகப் பெரிதாக வளர்ந்துள்ளன," என்றார்.

## ஊத்துக்காட்டில் "எள்' சாகுபடி தீவிரம்

காஞ்சிபுரம் : ஊத்துக்காடு ஏரி நிரம்பாததால், நன்செய் நிலங்களில், மானாவாரி பயிரான "எள்' சாகுபடி பணியில், விவசாயிகள் ஈடுபட்டு உள்ளனர்.

வாலாஜாபாத் ஒன்றியம், ஊத்துக்காட்டில் உள்ள ஏரி பொதுப்பணி துறைக்கு சொந்தமானது. இந்த ஏரி 1,200 ஏக்கர் பரப்பளவு கொண்டது. ஏரி நீரை பயன்

படுத்தி, ஊத்துக்காடு, கிதிரிப்பேட்டை, நெய்குப்பம், சேர்க்காடு, ஆகிய கிராமங்களைச் சேர்ந்த 1,000 ஏக்கர் விளை நிலங்கள் பாசன வசதி பெறுகின்றன. ஒவ்வொரு ஆண்டும் பருவ மழைக்கு ஏரி நிரம்பிவிடும்.

காஞ்சிபுரம் மாவட்டத்தில் நடப்பாண்டு, பருவ மழை சரிவர பெய்யாததால், ஊத்துக்காடு ஏரியில், 40 சதவீதம்தான் தண்ணீர் வந்தது.

இதனால், ஏரியின் முதல் மடையில் உள்ள, சில விவசாயிகள் தான், நெல் நடவு செய்து உள்ளனர்.

இடை மடை மற்றும் கடை மடையில் உள்ள நிலங்களுக்கு தண்ணீர் எட்டவில்லை.

இதனால் கடை மடையில் உள்ள விவசாயிகள், தங்கள் நிலங்களை "கரம்பாக' போடாமல், மானாவாரி பயிரான "எள்' பயிரை விதைத்து வருகின்றனர்.

## பொங்கல் திருநாளை வரவேற்க காத்திருக்கும் மஞ்சள் செடிகள்

ஆர்.கே.பேட்டை : பொங்கல் திருநாளை வரவேற்க, மஞ்சள் செடிகள் தயாராக உள்ளன. போகி அன்று அறுவடை செய்ய, விவசாயிகள் காத்திருக்கின்றனர்.

தமிழர் திருநாளான பொங்கல் பண்டிகை வரும் திங்கட்கிழமை கொண்டாடப்பட உள்ளது. இதற்காக, புதிதாக விளைந்த நெல் மற்றும் தானிய வகைகளை பொங்கல் தினத்தில், சூரிய பகவானுக்கு படைத்து வழிபடுவர்.

மஞ்சள் கிழங்குகளை கட்டி அலங்காரம் செய்யப்பட்ட, புதுப்பானையில் புதிய அரிசியை இட்டு, பொங்கல் இடுவர். மேலும், மஞ்சள் செடிகளை பூஜையில் வைத்து வழிபடுவர்.

இதையொட்டி, ஆர்.கே.பேட்டை அடுத்த, முள்ளிபாளையம் கிராமப் பகுதியில், விவசாயிகள் மஞ்சள் பயிர் செய்து உள்ளனர். அவை தற்போது வளர்ந்து, பொங்கலுக்கு காத்திருக்கின்றன. வரும் போகி அன்று அறுவடை செய்து விற்பனைக்கு அனுப்ப உள்ளனர்.

## ஆட்டுக்கொல்லி நோய் இங்கு பரவாமல் இருக்க தடுப்பூசி : முதல் கட்டமாக 80 ஆயிரம் ஆடுகளுக்கு சிகிச்சை

திருத்தணி : ஆந்திர மாநிலத்தில் உள்ள ஆட்டுக்கொல்லி நோய், தமிழக எல்லைக்குள் பரவாமல் தடுப்பதற்கு, மாவட்டத்தில் உள்ள அனைத்து ஆடுகளுக்கும் தடுப்பு ஊசிகள் போடுவதற்கு, கால்நடை துறையினர் திட்டமிட்டு உள்ளனர். இதற்கான பணியை, நேற்று முதல் துவங்கி உள்ளனர்.முதற்கட்டமாக, இம்மாத இறுதிக்குள், 80 ஆயிரம் ஆடுகளுக்கு, தடுப்பு மருந்து மற்றும் சிகிச்சை அளிக்கப்பட உள்ளது. திருவள்ளூர் மாவட்டம், தமிழக - ஆந்திர எல்லை பகுதியில் அமைந்து உள்ளது. மாவட்டத்தில், திருவள்ளூர், திருத்தணி மற்றும் பொன்னேரி ஆகிய மூன்று இடங்களில், கால்நடை உதவி இயக்குனர் அலுவலகங்கள் செயல்படுகின்றன.5 இடங்களில்...திருவள்ளூரில் மண்டல இயக்குனர் அலுவலகம் உள்ளது. திருவள்ளூர், அம்பத்தூர், பூந்தமல்லி, மீஞ்சூர், பொன்னேரி ஆகிய ஐந்து இடங்களில், கால்நடை மருத்துவமனைகள் இயங்கி வருகின்றன. திருத்தணி கோட்டத்தில் - 19, திருவள்ளூர் கோட்டத்தில் - 28, பொன்னேரி கோட்டத்தில் - 28, என, மொத்தம், 75 கால்நடை மருந்தகங்கள் உள்ளன.

இதை தவிர, 28 கிளை நிலையங்களும், ஒரு நடமாடும் கால்நடை மருந்தகமும் செயல்படுகின்றன.

இங்கு ஆடு, மாடு, நாய், கோழிகள் உட்பட அனைத்து கால்நடைகளுக்கும் சிகிச்சை அளிக்கப்படுகிறது.ஆட்டுக்கொல்லி நோய் திருவள்ளூர் மாவட்டத்தில், இலவச ஆடுகள் திட்டம் மற்றும் இறைச்சிக்காக, ஆந்திராவில் இருந்து ஆடுகள் வரவழைக்கப்படுகின்றன.தற்போது, ஆந்திர மாநிலத்தில் உள்ள குண்டூர் பகுதியில், ஆட்டுக்கொல்லி நோய் வேகமாக பரவி, அங்கு பல ஆயிரம் ஆடுகள் உயிர் இழந்தன. இந்நோய் தாக்கும் ஆடுகளுக்கு வாயில் புண் ஏற்பட்டும், மூக்கில் சளி பிடித்தும், நோய் தாக்கி நான்காவது நாளில் இறந்தும் விடுகின்றன.

80 ஆயிரம்... இந்த நோய் தற்போது, தமிழகத்தில் இல்லை. எனினும், இந்த நோய் தமிழகத்தில் பரவாமல் தடுக்க, முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, கால்நடை துறையினர், அனைத்து வெள்ளாடுகள் மற்றும் செம்மறி ஆடுகளுக்கு தடுப்பு ஊசி போட முடிவு செய்து உள்ளனர். இந்த தடுப்பு ஊசி ஒரு ஆண்டுக்கு, ஒரு முறை போட்டால் போதும்.இதுகுறித்து, பெயர் வெளியிட விரும்பாத கால்நடை துறை உதவி இயக்குனர் ஒருவர் கூறியதாவது:ஆடுகளுக்கு நோய் தாக்காத வண்ணம், மழை காலத்திற்கு முன்பும், மழை பெய்து முடிந்த உடன், கோமாரி தடுப்பு ஊசி போடப்பட்டு வருகிறது.பி.பி.ஆர்., தடுப்பூசி ஆந்திராவில் பரவி வரும் ஆட்டுக்கொல்லி நோயை, மாவட்டத்தில் பரவாமல் தடுக்க, பி.பி.ஆர்., தடுப்பு ஊசி போடும் பணியை, நேற்று முதல் துவங்கி உள்ளனர். தற்போது, முதற்கட்டமாக இந்தாண்டு திருத்தணி கால்நடை துறை கோட்டத்தில் உள்ள, 80 ஆயிரம் ஆடுகளுக்கு இந்த பி.பி.ஆர்., தடுப்பு ஊசி போடப்பட உள்ளது. இதற்காக, கால்நடை ஆய்வாளர், ஏழு பேர், கால்நடை உதவி மருத்துவர்கள், 19 பேர் என, மொத்தம், 26 பேர் இப்பணியில் ஈடுபடுத்தப்பட்டு உள்ளனர்.ஒரு மருத்துவருக்கு, இரு கிராமங்கள் என, ஒதுக்கப்பட்டு அனைத்து ஆடுகளுக்கும், தடுப்பு ஊசி போடப்பட உள்ளது.இவ்வாறு அவர் கூறினார்.

## நவரை பருவத்தில் விவசாயிகள் மும்முரம்: இயந்திரத்தில் நடுவதற்கு நாற்று உற்பத்தி

பேரம்பாக்கம் : போதிய கூலி ஆட்கள் கிடைக்காததால், நவரை பருவத்தில் இயந்திரம் மூலம் நடுவதற்கு வசதியாக, நாற்று உற்பத்தியில் விவசாயிகள் ஈடுபட்டு உள்ளனர்.

திருவள்ளூர் மாவட்டம், பேரம்பாக்கம், மப்பேடு, திருவாலங்காடு, பள்ளிப்பட்டு, திருத்தணி, ஊத்துக்கோட்டை, பொன்னேரி, கும்மிடிப்பூண்டி, வெள்ளவேடு உட்பட மாவட்டத்தின், பல பகுதிகளில் உள்ள விவசாய கூலிகள் பலர், தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின்கீழ் பணிக்கு செல்கின்றனர்.கடந்த ஆண்டு விவசாயம் பாதித்ததால், பலர், 100 நாட்கள் வேலைக்கு சென்று விட்டனர். குறிப்பாக, பெண்கள் தனியார் கம்பெனிகளில் வேலைக்கு சேர்ந்து ஓரளவு சம்பாதித்து

குடும்பத்தை நடத்தி வருகின்றனர்.
தற்போது, நெல் விலை உயர்வால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்து, முடங்கி கிடந்த பயிர் தொழிலை துவங்கினர்.தற்போது, நவரை பருவம் செய்ய நிலத்தை உழுது வருகின்றனர். ஆனால் போதுமான கூலியாட்கள் இல்லாததால், குறித்த நேரத்தில் பயிர் வேலைகள் செய்ய முடியாமல் திண்டாடினர்.இதனால், விவசாயிகள் இயந்திரம் மூலம் நாற்று நட முடிவு செய்து உள்ளனர். இதற்கென, நாற்றுகளை உற்பத்தி செய்யும் பணியில், தற்போது ஈடுபட்டு உள்ளனர். ஏர் உழ ஒருவருக்கு, 300 ரூபாய் கூலி கொடுத்து, ஒரு வாரம் முன்னதாக ஆட்களை அமர்த்தி வருகின்றனர்.

## நவரை பருவத்தில் விவசாயிகள் மும்முரம் இயந்திரத்தில் நடுவதற்கு நாற்று உற்பத்தி

பேரம்பாக்கம் : போதிய கூலி ஆட்கள் கிடைக்காததால், நவரை பருவத்தில் இயந்திரம் மூலம் நடுவதற்கு வசதியாக, நாற்று உற்பத்தியில் விவசாயிகள் ஈடுபட்டு உள்ளனர்.
திருவள்ளூர் மாவட்டம், பேரம்பாக்கம், மப்பேடு, திருவாலங்காடு, பள்ளிப்பட்டு, திருத்தணி, ஊத்துக்கோட்டை, பொன்னேரி, கும்மிடிப்பூண்டி, வெள்ளவேடு உட்பட மாவட்டத்தின், பல பகுதிகளில் உள்ள விவசாய கூலிகள் பலர், தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின்கீழ் பணிக்கு செல்கின்றனர். கடந்த ஆண்டு விவசாயம் பாதித்ததால், பலர், 100 நாட்கள் வேலைக்கு சென்று விட்டனர். குறிப்பாக, பெண்கள் தனியார் கம்பெனிகளில் வேலைக்கு சேர்ந்து ஓரளவு சம்பாதித்து குடும்பத்தை நடத்தி வருகின்றனர்.
தற்போது, நெல் விலை உயர்வால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்து, முடங்கி கிடந்த பயிர் தொழிலை துவங்கினர்.தற்போது, நவரை பருவம் செய்ய நிலத்தை உழுது வருகின்றனர். ஆனால் போதுமான கூலியாட்கள் இல்லாததால், குறித்த நேரத்தில் பயிர் வேலைகள் செய்ய முடியாமல் திண்டாடினர்.இதனால், விவசாயிகள் இயந்திரம் மூலம் நாற்று நட முடிவு செய்து உள்ளனர். இதற்கென, நாற்றுகளை உற்பத்தி செய்யும் பணியில், தற்போது ஈடுபட்டு உள்ளனர். ஏர் உழ ஒருவருக்கு, 300 ரூபாய் கூலி கொடுத்து, ஒரு வாரம் முன்னதாக ஆட்களை அமர்த்தி வருகின்றனர்.

## 3,000 மூட்டை பருத்தி ரூ.50 லட்சத்துக்கு ஏலம்

நாமக்கல்: வேளாண் விற்பனையாளர் கூட்டுறவு சங்கத்தில் நடந்த பருத்தி ஏலத்தில், 3,000, மூட்டைகள், 50 லட்சம் ரூபாய்க்கு ஏலம் போனது. பருத்திக்கு போதிய விலை கிடைக்கவில்லை என, விவசாயிகள் புலம்பி வருகின்றனர்.

நாமக்கல்-திருச்செங்கோடு சாலையில், நாமக்கல் வேளாண் உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கம் உள்ளது. நாமக்கல் மற்றும் சுற்று வட்டாரப்பகுதியில், ஆர்.சி.ஹெச்., டி.சி.ஹெச்., போல்கார்டு, சுரபி, சுவன், பி.டி., போன்ற ரகங்கள் அதிக அளவில் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இங்கு, வாரம்தோறும் வியாழக்கிழமை பருத்தி ஏலம் நடக்கிறது. அதற்காக, சேந்தமங்கலம், முத்துகாப்பட்டி, பேளுக்குறிச்சி, திருமலைப்பட்டி, காளப்பநாயக்கன்பட்டி மற்றும் துறையூர் கோட்டத்தூர், ரங்கநாதபுரம் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில், சாகுபடி செய்துள்ள பருத்தியை, விவசாயிகள் அறுவடை செய்து, ஏலத்துக்கு கொண்டு வருவது வழக்கம்.

அதன்படி, நேற்று நடந்த பருத்தி ஏலத்தில், 3,000 மூட்டை பருத்தி கொண்டுவரப்பட்டது. பருத்தி மூட்டைகளை தரம் பிரித்து, அதற்கேற்ப ஏலம் கோரப்பட்டது. நேற்று நடந்த ஏலத்தில், ஒரு கிலோ பருத்தி, சராசரியாக, 41 ரூபாய்க்கு விற்பனையானது. இது, கட்டுபடியாகாத விலை என, விவசாயிகள் கடும் அதிர்ச்சி அடைந்தனர்.

அதில், ஆர்.சி.ஹெச். ரகம் ஒரு குவிண்டால், 4,000, முதல், 4,300 ரூபாய் வரையும், டி.சி.ஹெச்., ரகம் ஒரு குவிண்டால், 4,500, முதல், 5,000 ரூபாய் வரையும் ஏலம்போனது. நேற்று ஒரு நாள் மட்டு,ம 3,000 மூட்டைகள், 50 லட்சம் ரூபாய்க்கு ஏலம் போனது.

பாரதி கிஷான் உழவர் மன்ற ஒன்றியச் செயலாளர் பெரியசாமி கூறியதாவது:

ஏலத்தில், பருத்திக்கு எதிர்பார்த்த விலை கிடைப்பதில்லை. மாறாக குறைந்த விலைக்கே விற்பனை செய்யப்படுகிறது. ஒரு ஆளுக்கு, 170, ரூபாய் கூலி கொடுத்து பருத்தி அறுவடை செய்யப்படுகிறது. நான்கு பேர் பணியாற்றினால் மட்டுமே ஒரு மூட்டை பருத்தி அறுவடை செய்ய முடியும்.

மேலும், ஏலத்துக்கு கொண்டு வருவதற்குள், 50 ரூபாய் வாடகைக்காக செலவு செய்யப்படுகிறது. உரச்செலவு, உழவு கூலி என பல்வேறு வகையில் செலவுபோக லாபம் கிடைக்கும் என நம்பினால், நஷ்டத்தையே விவசாயிகள் சந்திக்க வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். ஏலம் கூறும் வியாபாரிகள், ஐந்து, பத்து காசு என விலை வைத்து ஏலம் எடுப்பதால், போதிய விலை கிடைக்கவில்லை. முதலுக்கே மோசம் போகும் நிலை உருவாகியுள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

## உச்சம்! விளைச்சல் குறைந்ததால் கரும்பு விலை... 2 மடங்கு உயர்வால் விவசாயி மகிழ்ச்சி

புதுக்கோட்டை: கடந்த ஆண்டை விட, இந்த ஆண்டு கரும்பு விலை, இரண்டு மடங்கு அதிகரித்துள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

பொங்கல் பண்டிகை என்றாலே அனைவருக்கும் நினைவில் வருவது கரும்பு தான். கரும்பின் சுவையைப் போன்று, உணவளிக்கும் விவசாயிகளின் வாழ்க்கையும் இனிப்பாக அமையவேண்டும் என்பதற்காகத்தான், பொங்கல் பண்டிகையின் போது கரும்புக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது.
புதுக்கோட்டை மாவட்டத்தை பொறுத்தமட்டில் ஒவ்வொரு ஆண்டும், 6 ஆயிரம் முதல், 8 ஆயிரம் ஹெக்டேரில் கரும்பு சாகுபடி செய்வது வழக்கம். பொங்கல் பண்டிகையை குதூகலிக்க வேண்டும் என்பதற்காக, 2 ஏக்கருக்கு மேல் விவசாய நிலம் வைத்துள்ள விவசாயிகள் கூட, குறைந்தபட்சம் அரை ஏக்கரிலாவது பொங்கல் கரும்பு சாகுபடி செய்வதை வழக்கமாக கொண்டுள்ளனர்.
கடந்த ஆண்டு பருவமழை தவறாமல் பெய்ததாலும், நீர்நிலைகள் நிரம்பி வழிந்ததாலும், மாவட்டம் முழுவதும், 8 ஆயிரம் ஹெக்டேரில் பொங்கல் கரும்பு சாகுபடி செய்யப்பட்டது. நவீன சாகுபடி தொழில்நுட்ப முறைகள் பின்பற்றப்பட்டதால், இதன் மகசூலும் இருமடங்கு அதிகரித்தது. இவ்வாறு மாவட்டத்தில் கரும்பு உற்பத்தி அதிகரித்ததால், விலை வீழ்ச்சியடைந்தது.
வயல்வெளியில் தரத்தை பொறுத்து, 10 கரும்புகள் கொண்ட ஒரு கட்டு, 80 ரூபாய் முதல், 120 ரூபாய் வரை மட்டுமே விற்பனையானது. விலை வீழ்ச்சியடைந்ததால் விவசாயிகளுக்கு எதிர்பார்த்த வருமானம் கிடைக்கவில்லை.
இந்த ஆண்டு பருமழை பொய்த்துவிட்டதாலும், நீர்நிலைகள் வறண்டு விட்டதாலும், கரும்பு சாகுபடி மூன்றில் ஒரு பகுதியாக குறைந்தது. புதுக்கோட்டை அடுத்த பெருஞ்சுனை, சிறுஞ்சுனை, செல்லுக்குடி, விராலிமலை உள்ளிட்ட பகுதிகளில் பம்புசெட் பாசனத்தை நம்பி கிட்டத்தட்ட, மூவாயிரம் ஹெக்டேரில் மட்டுமே, பொங்கல் கரும்பு சாகுபடி செய்யப்பட்டது.
இவ்வாறு சாகுபடி செய்யப்பட்ட கரும்பு பயிர்களுக்கு தண்ணீர் பாய்ச்ச, ஒருமணி நேரத்துக்கு, 200 ரூபாய் வீதம் விவசாயிகள் செலவிட்டுள்ளனர். இருந்தும் கடந்த ஆண்டை விட கரும்பு உற்பத்தி குறைந்ததாலும், விலை இரண்டு மடங்கு அதிகரித்துள்ளதாலும், விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.
வயல்வெளி தரத்தை பொறுத்து, 10 கரும்புகள் கொண்ட கட்டு ஒன்று, 250 முதல், 300 ரூபாய் வரையிலும் விற்பனையாகிறது.
இதுகுறித்து சிறுஞ்சுனை கிராமத்தைச் சேர்ந்த கரும்பு விவசாயி இளையராஜா கூறியதாவது: வழக்கம்போல் இந்த ஆண்டும், இரண்டு ஏக்கரில் பொங்கல் கரும்பு சாகுபடி செய்துள்ளேன். கண்மாயில் தண்ணீர் இல்லாததால், அருகில் உள்ள பம்புசெட்டிலிருந்து வாரத்துக்கு ஒருமுறை, நான்குமணி நேரம் தண்ணீர் விலைக்கு வாங்கி, பாசனம் செய்தேன். இதற்காக பம்புசெட்

உரிமையாளருக்கு ஒருமணி நேரத்துக்கு, 200 ரூபாய் வீதம் வாரம், 800 ரூபாய் தண்ணீருக்காக மட்டும் செலவிடவேண்டி வந்தது. இருந்தும் இந்த ஆண்டு ஒரு கட்டு கரும்பு, 250 முதல் 300 ரூபாய் வரை விற்பனையாகிறது.

வியாபாரிகள் வயல்வெளிக்கே வந்து கரும்புகளை வாங்கிச் செல்கின்றனர். இதனால் போக்குவரத்து செலவும் மிச்சம் என்பதால், ஏக்கருக்கு குறைந்தபட்சம், 5 ஆயிரம் ரூபாய் வரை லாபம் கிடைக்க வாய்ப்பு உள்ளது. இந்த ஆண்டு பொங்கல் கரும்பு சாகுபடி வெகுவாக குறைந்துள்ளதால், விலை மேலும் கூடுமே தவிர, குறைய வாய்ப்பில்லை.

இவ்வாறு அவர் கூறினார்.

## டெல்டா மாவட்டங்களில் உயர்மட்ட குழு ஆய்வு



நாகை : மேட்டூர் அணை தாமதமாக திறக்கப்பட்டது, கர்நாடகா காவிரியில் தண்ணீர் திறக்காதது, கடு மையான மின்வெட்டால் காவிரி டெல்டா மாவட்டங்களான தஞ்சை, திருவாரூர், நாகை மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களில் 8 லட்சம் ஏக்கரில் சம்பா பயிர்கள் நீரின்றி கருகின. பயிர்களை காப்பாற்ற முடியாத வேதனையில் விவசாயிகள் தற்கொலை தொடர்ந்து வருகிறது.

காவிரியில் தண்ணீர் விடாத கர்நாடகாவை கண்டித்து டெல்டாவில் பல்வேறு அரசியல் கட்சிகள் மற்றும் விவசாய சங்கங்கள் சார்பில் போராட்டம் நடந்தது. இந்நிலையில் சம்பா பாதிப்பு குறித்து ஆய்வு செய்ய அமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் தலைமையில் ஒரு உயர்மட்ட குழுவை தமிழக அரசு அமைத்தது. உயர்மட்ட குழுவினர் நேற்று நாகை மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளுக்கு சென்று கருகிய சம்பா பயிர்களை பார்வையிட்டனர்.

நாகை மாவட்டம் மயிலாடுதுறை அடுத்த காளியப்பநல்லூரில் இருந்து ஆய்வை தொடங்கினர். கருகிய பயிர்களை காட்டி கண்ணீர் விட்ட விவசாயிகளிடம் அவர்களது குறைகளை குழுவினர் கேட்டனர். செல்லும் வழியில் விவசாயிகள் ஆங்காங்கே திரண்டு நின்று, செலவு செய்த பணம் எல்லாம் வீணாகிவிட்டது என கண்ணீர் மல்க கூறினர்.

10th jan 2013

## மாவட்டத்தில் பயிர்கள் கருகிய பின் கனமழை விவசாயிகள் விரக்தி

தொண்டி, : உரிய நேரத்தில் பெய்யாமல் பயிர்களெல்லாம் கருகியபின் மழை பெய்து எவ்வித பயனும் இல்லை என விவசாயிகள் வேதனையுடன் தெரிவித்தனர்.

ராமநாதபுரம் மாவட்டத்தின் நெற்களஞ்சியம் என அழைககப்படும் திருவாடானை தாலுகாவில் 45 ஆயிரம் ஹெக்டேர் நிலப்பரப்பில் நெல் விவசாயம் நடக்கிறது. வானம் பார்த்த பூமியான இப்பகுதியில் மழையை மட்டுமே நம்பி விவசாய பணிகள் நடப்பது வழக்கம். கடந்தாண்டு தென்மேற்கு பருவமழையும் கைவிட்டது, வடகிழக்கு பருவமழையை நம்பி விவசாய பணிகளை மேற்கொண்ட விவசாயிகளுக்கு கடும் நஷ்டம் ஏற்பட்டுள்ளது.

உரிய நேரத்தில் வடகிழக்கு பருவமழை பெய்யவில்லை. பல இடங்களில் நெற்பயிர்கள் பால் பிடிக் கும் நேரத்தில் மழை இல்லாததால் கருகிவிட்டன.

தொண்டியை பொறுத்தவரையில், முகிழ்த்தகம், காடாங்குடி, தினையத்தூர், திருவெற்றியூர், தொண்டி உட்பட பல கிராமங்களில் பயிரிடப்பட்ட நெற்பயிர்கள் கருகிவிட்டன. பருவம் தவறி 2 நாட்களாக  மழை பெய்து வருகிறது. இது விவசாய பணிக்கு எந்தவிதத்திலும் பயன்படாது. நிலத்தடிநீர் வேண்டுமானால் உயரும். கடந்த மாதம் இதே அளவு மழை பெய்திருந்தால் பயிர்களை காப்பாற்றியிருககலாம் என விவசாயிகள் தெரிவித்தனர்.

இதுகுறித்து முகிழ்த்தகம் கிராமத்தைச்சேர்ந்த விவசாயி முருகேசன் கூறியதாவது:

‘கடந்தாண்டு விவசாயிகளுக்கு போதாத ஆண்டாக அமைந்துவிட்டது. தென்மேற்கு பருவமழை, வடகிழக்கு பருவமழை என மழையை நம்பி விதைத்தோம். காத்திருதோம். ஆனால், ஏமாற்றம் மட்டுமே மிஞ்சியது. பயிர்களெல்லாம் கருகி, மேய்ச்சலுக்காக கால்நடைகளை விட்டோம். மனமுடைந்த நிலையில் இருந்தோம். கடந்த 2 நாட்களாக மழை பெய்கிறது. சீசன் மாறி மழை பெய்வதால் விவசாயத்திற்கு பயன்படாது. இதே நிலை வரும் ஆண்டுகளில் தொடர்ந்தால், விவசாயம் அழிந்துவிடும்.

இவ்வாறு அவர் கூறினார்.

## மிளகாய் பயிர் இன்சூரன்ஸ் ஜன.15ம் தேதி கடைசி நாள்

ராமநாதபுரம், : மிளகாய் பயிர் இன்சூரன்சுக்கான பிரீமியத்தை ஜன.15க்குள் விவசாயிகள் செலுத்த வேண்டும் என மாவட்ட தோட்டக்கலை அலுவலர் இளங்கோவன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் விடுத்துள்ள அறிக்கை:

ராமநாதபுரம் மாவட்டத்தில் நெல்பயிர் சாகுபடிக்கு அடுத்து பிரதான தோட்டக்கலை பயிராக மிளகாய் பயிரிடப்படுகிறது. வெள்ளம், மழை, புயல், கடுமையான வறட்சி, பூச்சி மற்றும் நோய் தாக்குதலினால் ஏற்படும் பாதிப்புகளுக்கு இழப்பீடு வழங்கும் விதமாக நடப்பாண்டில் மிளகாய் பயிரிடும் விவசாயிகள் தேசிய வேளாண்மைக் காப்பீட்டு நிறுவனம் மூலம் பயிர் இன்சூரன்ஸ் செய்யும் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது.

மிளகாய் சாகுபடி செய்துள்ள விவசாயிகள் பயிர் காப்பீடு திட்டத்தில் பதிவு செய்ய குறைந்த நாட்களே உள்ளன. தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்கள் மற்றும் வங்கிகளில் கடன் பெறாத விவசாயிகள் இம்மாதம் (ஜன.15க்குள்) மிளகாய் பயிருக்கு பிரீமியத்தை செலுத்த வேண்டும். பொங்கல் மற்றும் இதர அரசு விடுமுறை நாட்களுக்கு முன் அதாவது ஜன.12க்குள் பணம் செலுத்த வேண்டும். கடைசி நேர தாமதத்தை தவிர்க்க விவசாயிகள் முன் வர வேண்டும். மழை இல்லாத காரணத்தால் பூக்கும் தருணத்தில் அதிகமாக பூக்கள் பிடிக்காமல், காய்ப்பு குறைந்தாலும் அதற்கு ஏற்றவாறு பயிர் இன்சூரன்சு தொகை பெறலாம். ஒரு ஏக்கருக்கு பெரிய விவசாயிகள் ரூ.254ம், சிறு மற்றும் குறு விவசாயிகள் ரூ.228ம் பணம் செலுத்த வேண்டும். கிராமநிர்வாக அலுவலர்களிடம் அடங்கல் பெற்று, தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களில் பிரிமியத்தொகை கட்ட வேண்டும்.

தங்கள் பகுதிகளில் உள்ள தோட்டக்கலை உதவி இயக்குனர் அலுவலகங்களில் விவசாயிகள் மிளகாய் பயிரில் பயிர் காப்பீட்டு திட்டம் குறித்த விபரம் மற்றும் உதவிகளை பெறலாம். ராமநாதபுரம் மாவட்டத்தல் ராமநாதபுரம், மண்டபம், திருப்புல்லாணி, திருவாடனை, ஆர்.எஸ்.மங்கலம், பரமக்குடி, நயினார்கோயில், போகலூர், கமுதி, முதுகுளத்தூர், கடலாடி உள்ளிட்ட வட்டார தோட்டக்கலை உதவி இயக்குனர் அலுவலகங்களிலும் மிளகாய் பயிர் இன்சூரன்சு தொடர்பான விபரங்களை அறிந்து பயனடையலாம் என அவர் தெரிவித்துள்ளார்.

## உணவு பதப்படுத்தும் தொழில் துவக்க அரசு மானிய திட்ட உதவிகள் அறிவிப்பு

ராமநாதபுரம், : ராமநாதபுரம் மாவட்ட வே ளா ண்மை துணை இயக்கு நர்(வேளாண் வணிகம்) ராஜகோபால் கூறியதாவது:

ராமநாதபுரம் மாவட்டத்தில் உணவு பதப்படுத்தும் இயக்கம் செயல்படுகிறது. இந்த இயக்கம் மாவட்ட கலெக்டரின் தலைமையின்கீழ் இயங்குகிறது. உணவாக உபயோகப்படுத்தும் பொருட்களை உற்பத்தி செய்வது உணவுப் பதப்படுத்துதல் என்பதாகும். அரிசி ஆலைகள், மீன் பதனிடுதல், தேங்காய்ப் பால், தேங்காய் பவுடர் தயாரித்தல், மிளகாய் பவு டர், மிளகாய்

எண்ணெய், தவிடு எண்ணெய், மசாலா ஆகிய தொழிற்சாலைகளை ஏற்படுத்துதல் அல்லது அத்தொழிலில் உள்ளவர்கள் தங்களது தொழிலை மேம்படுத்துதல் இந்த இயக்கத்தின் நோக்கமாகும்.

உணவு பதப்படுத்தும் இயக்கத்தின்கீழ் உணவு பதப்படுத்தும் தொழில்களில் ஈடுபடும் தொழில் முனைவோர்களுக்கு தொழிற்சாலைகளை ஏற்படுத்துதல், தொழிற்சாலைகளை மேம்படுத்துதல் அல்லது நவீனப்படுத்துதல், தொழிற்சாலைகளில் தொழில்நுட்ப மேம்பாடு ஆகியவற்றிற்கு, 25 சதவீத மானியமாக அதிகபட்சம் ரூ.50 லட்சம் வழங்கப்படுகிறது. உணவு பதப்படுத்தும் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள் தங்களது தொழிற்சாலைகளில் உணவு பதப்படுத்தும் குளிர்பதன வசதி மற்றும் குளிரூட்டப்பட்ட வாகன வசதி போன்றவைகளை ஏற்படுத்த 50 சதவீத மானியமாக அதிகபட்சம் ரூ.10 கோடி வரை வழங்கப்படுகிறது.

பொறியியல் மற்றும் பாலிடெக்னிக் கல்லூரிகள் தங்களது கல்லூரியில் உணவு பதப்படுத்துவது தொடர்பான பட்டப்படிப்பு, பட்டயப்படிப்பு மற்றும் சர்டிபிகேட் படிப்புகளுக்கு தேவையான உள்கட்டமைப்பு வசதிகள், படிப்புக்கு தேவையான புத்தகங்கள், பரிசோதனைக் கூடக் கருவிகள் ஆகியவற்றினை வாங்க அதிகபட்சமாக ரூ.75 லட்சம் வழங்கப்படுகிறது.

தொழில் முனைவோ ருக்கு பயிற்சிகள் வழங்க ரூ.2 லட்சம் நிதியுதவி வழங்கப்படுகிறது. உணவு பதப்படுத்தும் பயிற்சி மையங்கள் மூலம் பயிற்சிகள் வழங்க, ஒரு பொருள் பயிற்சிக்கு ரூ.4 லட்சம் நிலையான முதலீடாகவும், ரூ.2 லட்சம் சுழற்சி முதலீடாகவும், பல பொருள் பயிற்சிக்கு ரூ.11 லட்சம் நிலையான முதலீடாகவும், ரூ.4 லட்சம் சுழற்சி முதலீடாகவும் வழங்கப்படுகிறது. மேலும் விபரங்கள் தேவைப்படுவோர் ஷ்ஷ்ஷ்.னீஷீயீஜீவீ.ஸீவீநீ.வீஸீ எனும் இணைய தள முகவரி அல்லது ராமநாதபுரம் வேளாண்மை துணை இயக்குநரை (வேளாண் வணிகம்) அணுகலாம் என அவர் தெரிவித்துள்ளார்.

## தென்னை மரங்களின் நண்பர்கள் தேனி அருகே பயிற்சி முகாம்

தேனி, : காமாட்சிபுரம் சென்டெக்ட் வேளாண் அறிவியல் மையத்தில், தென்னை வளாச்சி வாரியத்தின் சார்பில், தென்னை மரங்களின் நண்பர்கள் பயிற்சி முகாம் நடந்தது.

தேனி அருகே காமாட்சிபுரத்தில் உள்ள சென்டெக்ட் வேளாண்மை அறிவியல் மையத்தில் சென்னை தென்னை வளர்ச்சி வாரியத்தின் மண்டல அலுவலகத்தின் சார்பில், தென்னை மரங்களின் நண்பர்கள் பயிற்சி நடந்தது. பயிற்சி முகாமிற்கு பெரியகுளம் தோட்டக்கலை கல்லூரி முதல்வர் பொன்னுச்சாமி தலைமை வகித்தார். தென்னை வளர்ச்சி வாரியத்தின் கள அலுவலர்

பரமசிவம் முன்னிலை வகித்தார். இதனை சென்டெக்ட் வேளாண் அறிவியல் மைய சேர்மன் பச்சைமால் துவக்கி வைத்தார். இம்மைய உழவர் பயிற்சி மைய துணை இயக்குநர் திலகர், மற்றும் மையத்தின் திட்ட ஒருங்கிணைப்பாளர் மாரிமுத்து ஆகியோர் தென்னை சாகுபடியில் நவீன தொழில்நுட்பங்கள் குறித்து, இளைஞர்களை தென்னை வல்லுநர்களாக மாற்றுவதன் அவசியம் குறித்தும் விளக்கினர்.

இதில் மாவட்ட விவசாயிகள் சங்கத் தலைவர் பாண்டியன், வைகை தென்னை விவசாயிகள் நலச் சங்க செயலாளர் பன்னீர்செல்வம் ஆகியோர் பேசினர். இதில், கம்பம் புதுப்பட்டி, வெங்கடாசலபுரம், கோம்பை, கடமலைக்குண்டு, ராசிங்காபுரம், காமாட்சிபுரம், ஓடைப்பட்டி, குமணன்தொழு, துரைச்சாமிபுரம், கைலாசப்பட்டி, எரசக்கநாயக்கனூர், காமயக்கவுண்டன்பட்டி, கன்னிச்சேர்வைபட்டி உள்ளிட்ட பகுதிகளை சேர்ந்த 20 விவசாயம் சார்ந்த இளைஞர்கள், விவசாயிகள் கலந்து கொண்டனர்.

## கொட்டை முந்திரி பயிர்களை தாக்கும் தேயிலைக்கொசுக்கள் தோட்டக்கலைத்துறை விளக்கம்

உத்தமபாளையம், : உத்தமபாளையம், கோம்பை, தேவாரம், கம்பம் பகுதியில் கூடலூர், அனுமந்தன்பட்டி, க.புதுப்பட்டி, உள்ளிட்ட ஊர்களில் அதிகளவில் கொட்டைமுந்திரிப்பயிர்கள் பயிரிடப்பட்டுள்ளது. தற்போது பூ பூக்க தொடங்கியுள்ளது. பூக்கள் இளந்தளிர்களை தேயிலை கொசுக் கள் அதிகமாக தாக்கி சேதத்தை ஏற்படுத்துகின்றன.

இக்கொசுக்களை கட்டுப்படுத்துவது குறித்து உத்தமபாளையம், கம்பம் தோட்டக்கலைத்துறை உதவி இயக்குநர் ராஜன் கூறியதாவது: வளர்ச்சியடைந்த தேயிலைகொசுக்களும், இதன் குஞ்சுகளும் துளிர்இலைகள், பூங்கொத்து மற்றும் பிஞ்சுகளில் இருந்து சாற்றை உறிஞ்சி சேதப்படுத்துகின்றன. இவை நச்சுத்தன்மை கொண்ட உமிழ் நீரை உள்ளேசெலுத்தி சாறை உறிஞ்சுவதால் தாக்கப்பட்ட பூங்கொத்துக்கள் மற்றும் பிஞ்சுகொட்டைகள் காய்ந்து கருகிவிடுகின்றன. சீதோஷ்ணநிலை சாதகமாக, அமைந்துவிட்டால் திடீரென்று ஒரு வாரத்திற்குள்ளாக பெருகி, தோப்பில் மகசூலே கிடைக்காதவகையில் நாசமாக்கிவிடும். இப்பூச்சியை விவசாயிகள் சூரைப்பூச்சி, என்றும் கொல்லிப்பூச்சி என்றும் அழைக்கின்றனர். தேயிலைக்கொசு முந்திரியை தவிர வேம்பு, கொய்யா, நாவல், போன்ற மரங்களையும் அதிகளவில் தாக்கும். இப்பூச்சியை கட்டுப்படுத்திட முன்றுமுறை மருந்துதெளிப்பு மேற்கொள்ளவேண்டும். முதலாவதாக, முந்திரிதளிர்விடும்போது, மானோசூரோட்டாபாஸ், 36 டபுள்யூ. எஸ்.சி மருந் தினை, ஒருலிட்டர் தண்ணீர்க்கு 2.0 மி.லி என்றஅளவில் தெளிக்கவேண்டும். இரண்டாம்

தெளிப்பாக, டிசம்பர்-ஜனவரிமாதங்களில் முந்திரிபூக்கும் பருவத்தில் குளோர்மைரிபாஸ், 20 இ.சி மருந்தினை ஒரு லிட்டர் தண்ணீருக்கு 2.5 மி.லி. என்ற அளவில் கலந்து தெளிக்கவேண்டும். 3ம் தெளிப்பு, பிப்ரவரி, மார்ச் மாதத்தில் முந்திரி பிஞ்சுவிடும் பருவத்தில், கார்பரில் மருந்தை ஒருலிட்டர் தண்ணீருக்கு 2.0 கிராம் வீதம்,  கரைத்து தெளிக்க வேண்டும். மருந்தை இலைகள் நன்றாக நனைந்து ஒழுகும்படியும் உள்வாட்டத்தில் சிம்புகளிலும், கிளைகளிலும் பரவலாக தெளிப் பது மிகவும் அவசியம்' என்றார்.

## மழை இல்லாததால் பனங்கிழங்கு விளைச்சல் பாதிப்பு

திருவில்லிபுத்தூர், : போதிய மழை இல்லாததால் திருவில்லிபுத்தூர் பகுதியில் பனங்கிழங்கு விளைச்சல் பாதிக்கப்பட்டுள்ளது.

திருவில்லிபுத்தூர் மற்றும் சுற்றுவட்டார பகுதிகளில் விவசாயம் முக்கிய தொழிலாக உள்ளது. இப்பகுதியில் நெல், கரும்பு உள்ளிட்ட பயிர்களை விளைவித்து வருகின்றனர். திருவில்லிபுத்தூர் திருவண்ணாமலை பகுதியைச் சேர்ந்த விவசாயிகள், பனங்கிழங்கு பயிரிட்டு வருகின்றனர். இப்பகுதியில் விளையும் பனங்கிழங்குகளுக்கு தனி ருசி இருப்பதால், நல்ல மவுசு உண்டு. இதனால் விற்பனைக்காக பல்வேறு ஊர்களுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன. இந்த ஆண்டு போதிய மழை இல்லாமல், பனங்கொட்டைகள் விளைச்சலின்றி ஊமைக்காய் ஆனதால் விவசாயிகள் மிகுந்த கவலை அடைந்துள்ளனர்.

இதுகுறித்து விவசாயி முத்தையா (47) கூறுகையில், `பனங்கிழங்கு பயிரிட்டு 3 மாதத்தில் அறுவடை செய்துவிடுவோம். திருவில்லிபுத்தூர் அருகே உள்ள மம்சாபுரம் உள்ளிட்ட பகுதிகளில் இருந்து பனங்கொட்டைகளை வாங்கிவந்து பயிரிட்டோம். நிலத்தின் அளவிற்கேற்ப 500 முதல் 650  பனங்கொட்டைகள் பயிரிட்டோம்.

இந்த ஆண்டு போதிய மழை பெய்யாததால், பயிரிட்ட பனங்காய்களில் பெரும்பாலானவை ஊமைக்காய்களாக (முளைக்காத கொட்டை கள்) மாறிவிட்டன. மேலும், காட்டுப்பன்றிகள் அட்டகாசத்தால் விளைச்சல் மேலும் பாதித்துவிட்டது. செலவழித்த தொகையைக்கூட எடுக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. பொங்கலுக்கு சில தினங்களே உள்ளது. இருப்பினும், விற்பனைக்கு கூட போதிய கிழங்குகள் கிடைக்கவில்லை என்று கவலையுடன் தெரிவித்தார். இருப்பினும், சில இடங்களில் மண்வளம் மற்றும் பாசன வசதி தன்மையை பொறுத்து ஓரளவு பனங்கிழங்குகள் விளைந்துள்ளன.

## கருகிய பயிர்களுக்கு இழப்பீடு கேட்டு விவசாயிகள் திடீர் மறியல்: 76 பேர் கைது

ராஜபாளையம், : கரு கிய பயிர்களுக்கு இழப்பீடு வழங்கக்கோரி ராஜபாளை யம் தாலுகா அலுவலகம் முன்பு மறியலில் ஈடுபட்ட விவசாயிகள் 76 பேரை போலீசார் கைது செய்தனர். பருவமழை பொய்த்த தால் தமிழகம் முழுவதும் விவசாயம் கடுமையாக பா திக்கப்பட்டுள்ளது. உரிய நிவாரணம் வழங்கக்கோரி டெல்டா மாவட்ட விவசாயிகள் கடந்த 3 நாட்களாக தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். விருதுநகர் மாவட்டத்திலும் விவசாயம் கடுமையாக பா திக்கப்பட்டுள்ளது. எனவே, வறட்சி மாவட்டமாக அறி விக்க வலியுறுத்தி விவசாயி கள் மாவட்ட நிர்வாகத்திடம் கோரிக்கை விடுத்தனர்.

இந்நிலையில் தமிழக விவசாயிகள் சங்கத்தினர் கோரிக்கைகளை வலியுறு த்தி நேற்று ராஜபாளையம் தாலுகா அலுவலகத்தை முற்றுகையிட்டனர். விருதுநகரை வறட்சி மாவட்டமாக அறிவிக்க வேண்டும், தேசிய பேரிடர் திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு ஏக்கரு க்கு ரூ.25 ஆயிரம் இழப்பீடு வழங்க வேண்டும். தற்கொ லை செய்த புதுக்கோட்டை விவசாயி பாண்டி குடும்பத்திற்கு ரூ.10 லட்சம் நிவார ணம் வழங்குவதுடன், அவரது குடும்பத்தில் ஒருவருக்கு அரசு வேலை வழங்க வேண்டும் உள்ளிட்ட கோ ரிக்கைகளை வலியுறுத்தி கோஷமிட்டனர்.

மாவட்டத் தலைவர் ரா மச்சந்திரராஜா தலைமை வகித்தார். செயலாளர் அம்மையப்பன் முன்னிலை வகி த்தார். மாநில துணை தலைவர் ரகுபதிராஜா, மாவட்ட துணை தலைவர் பாஸ்கர்ராஜா, தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாவட்ட தலைவர் விஜயகுமார் உட் பட பலர் பேசினர். பின்பு ராஜபாளையம் தாலுகா அலு வலகம் முன்பு மறிய லில் ஈடுபட்டனர்.

மறியல் செய்த 6 பெண்கள் உட்பட 76 விவசாயிகளை போலீ சார் கைதுசெய்தனர். மாலை யில் அனைவரும் விடுவிக்கப்பட்டனர்.

## மக்காச்சோள விலை கடும் வீழ்ச்சி

சிவகாசி, : சிவகாசி பகுதியில் மக்காச்சோள விலை கடுமையாக வீழ்ச்சி அடைந்துள்ளதால் விவசாயிகள் வேதனை அடைந்துள்ளனர். அரசு கொள்முதல் செய்ய கோரிக்கை எழுந்துள்ளது. சிவகாசியை ஒன்றிய பகுதியில் செங்கமலபட்டி, நாரணாபுரம், புதூர், லட்சுமியாபுரம், கன்னிசேரி, முதலிபட்டி, எரிச்சநத்தம், புதுக்கோட்டை, நடையனேரி உள்ளிட்ட கிராம பகுதியில் சுமார் 500 ஏக்கர் பரப்பில் மக்காசோளம் சாகுபடி செய்துள்ளனர். பருவமழை பொய்த்ததால் சுமார் 200 ஏக்கர் மானாவாரி நிலங்களில் மக்காச்சோள பயிரிகள் கருகிவிட்டன. கிணற்று பாசன விவசாயிகளும் மின்வெட்டு பிரச்னையால் தண்ணீர் பாய்ச்ச முடியாமல் போதிய விளைச்சல் இன்றி

அவதிப்படுகின்றனர்.

மக்காச்சோள சாகுபடிக்கு நிலத்தை பண்படுத்துதல், விதை, உரம் இடுதல், களை பறிப்பு என ஏக்கருக்கு ரூ.20 ஆயரம் வரை செலவு பிடிக்கிறது. பயிர்கள் நன்கு விளைந்து கதிர் பிடித்திருந்தால் ஏக்கருக்கு 18 முதல் 20 டன் வரை மகசூல் கிடைக்கும். மக்காசோளம் நடவு செய்து 120 நாட்களில் அறுவடைக்கு தயாராகிவிடும். 90 நாட்களுக்கு தொடர்ந்து தண்ணீர் பாய்ச்ச வேண்டும். ஒரு டன் மக்காசோள பயிருக்கு மத்திய அரசு ரூ.1,375 ஆதார வலை நிர்ணயித்துள்ளது.

மக்காசோளம் அனைத்து காலத்திலும் பயிர்செய்ய ஏற்றது என்பதால் விவசாயிகள் அதிமானோர் இதனை சாகுபடி செய்கின்றனர். மக்காசோள பய¤ர் காசல், செம்மண் என அனைத்துவகை நிலத்திலும் நன்கு  விளையும் தன்மை கொண்டது. கிணற்று பாசனத்தில் ஆண்டுக்கு 2 போகம் வரை சாகுபடி செய்யலாம். கிணற்று பாசன விவசாயிகள் தற்போது பயிர்காலம் முடிந்து அறுவடையை துவக்கியுள்ளனர். போதிய விளைச்சல் இல்லாததால் ஏக்கருக்கு 16 டன் வரை மகசூல் கிடைத்து வருகிறது. வேளாண் விற்பனைக்குழு மக்காசோள பயர்களை கொள்முதல் செய்ய முன்வராததால், வியாபாரிகள் சின்டிகேட் அமைத்து குறைந்த விலைக்கு கேட்கின்றனர். இதனால் அறுவடை செய்த பயிர்களை விற்காமல் விவசாயிகள் களத்திலேயே வைத்துள்ளனர். பயிர்கள் காய்ந்து வருவதால் வேதனையடைந்துள்ளனர்.

இது குறித்து சிவகாசி வட்டார பாசன சங்க தலைவர் திருவேங்கிடராமானுஜம் கூறுகையில், `மக்காச்சோளம் சாகுபடிக்கு தேவையான டிஏபி உரம் ஒரு மூடை ரூ.425ல் இருந்து ரூ.1250 ஆகவும், பொட்டாஷ் உரமூடை ரூ.280ல் இருந்து ரூ.900 ஆகவும் விலை உயர்ந்துள்ளது. ஆனால் மக்காச்சோள பயரை வியாபாரிகள் சின்டிகேட் அமைத்து குவிண்டால் ரூ.1,300 க்கு கேட்கின்றனர். இதுமத்திய அரசின ஆதார விலையைவிட குறைவானது. இதனால் விளைந்த பயிர்களை விற்க விவசாயிகள் முன்வராததால் களத்திலேயே வைத்துள்ளனர். தமிழக அரசு குவிண்டாலுக்கு ரூ.ஆயிரத்து 500 ஆதார விலை நிர்ணயித்து, வேளாண் விற்பனைக்குழு மூலம் கொள்முதல் செய்ய வேண்டும் என்றார்.

## விவசாயிகளுக்கு வேளாண் தொழில்நுட்ப பயிற்சி

வேடசந்தூர், : வேடசந்தூர் அருகே பூத்தாம்பட்டியில் அட்மா திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு தொழில்நுட்ப பயிற்சி முகாம் நடந்தது.

முகாமிற்கு ஒன்றியக்குழு தலைவர் சுப்பிரமணியன் தலைமை வகித்தார். ஒன்றியக்குழு உறுப்பினர்கள் தனலட்சுமி ஆறுமுகம், அம்மையப்பன், அட்மா திட்ட வட்டார தொழில்நுட்ப

மேலாளர் ராஜேந்திரன் முன்னிலை வகித்தனர். வேடசந்தூர் வட்டார வேளாண் உதவி இயக்குநர் சுருளியப்பன் வரவேற்றார்.

வேளாண் இணை இயக்குநர் சம்பத்குமார், துணை இயக்குநர் கிருஷ்ணமூர்த்தி, வேளாண் பொறியாளர் பொன்னுத்துரை, வேளாண் அலுவலர்கள் கதிரேசன், பொன்ராஜ், மாரம்பாடி உதவி கால்நடை டாக்டர் பரமேஸ்வரி, காந்திகிராமம் வேளாண் அறிவியல் மைய பேராசிரியர் உதயகுமார் உள்ளிட்டோர் விவசாய தொழல்நுட்பம் பற்றி பயிற்சி அளித்தனர். வேளாண் உதவி அலுவலர் கண்ணன் நன்றி கூறினார்.

## இடைவிடாத மழையால் இன்னல் அறுவடை நேரத்தில் அழுகும் பயிர்கள்

தேவகோட்டை, : பருவமழை பொய்த்து, வறட்சியால் பயிர்களை காக்க முடியாமல் ஆங்காங்கே விவசாயிகள் தற்கொலை செய்து கொள்ளும் சம்பவங்கள் நடக்கின்றன. ஆனால், தேவகோட்டை பகுதியில் கடந்த இரண்டு நாட்களாக இடைவிடாது மழை கொட்டுகிறது. இதனால் வயல்களில் தண்ணீர் தேங்கி பயிர்கள் அழுகி வருகின்றன.ஒருபுறம் பெய்யாமல் கெடுக்கிறது.. மறுபுறம் பெய்து கெடுக்கிறதே.. என்று விவசாயிகள், புலம்புகின்றனர்.

தேவகோட்டை தாலுகா பகுதியில் கடந்த சில மாதங்களாக மழை இல்லாததால், விவசாய பரப்பு குறைந்தது. சில விவசாயிகள் மட்டும் பம்ப்செட் வைத்து தண்ணீர் பாய்ச்சி பயிர்களை காப்பாற்றி வருகின்றனர். இன்னும் சில விவசாயிகள், கண்மாய் தண்ணீரை போராடி பெற்று, கடும் சிரமத்திற்கிடையே பயிர்களை காத்து வருகின்றனர். கண்மாய் நீருக்காக இவர்கள்நீயா...நானா என்று போட்டி போட்டதால், ஊர்க்கூட்டங்கள் கூட்டி,டைம்டேபிள் போடப்பட்டது. முறை வரும் போது மட்டும் சம்பந்தபட்ட விவசாயிகள், மோட்டார் வைத்து கண்மாய் தண்ணீரை உறிஞ்சி வயலுக்கு பாய்ச்சி கொள்ளலாம். ஆனாலும் சிலர் தண்ணீர் கிடைக்காமல் மனவருத்தத்தில் புலம்பியபடி இருந்தனர்.

இவ்வளவு இக்கட்டான சூழ்நிலையிலும், எப்படியோ பயிரை காத்து அறுவடைக்கு விவசாயிகள் தயாராகி வந்தனர். ஆனால்,இருந்தும் கெடுப்பேன்...இறந்தும் கெடுப்பேன் என்பது போல் தற்போது கடந்த இரண்டு நாட்களாக தேவகோட்டை பகுதியில் மழை வெளுத்து வாங்குகிறது. அறுவடைக்கு தயாராக இருந்த வயல்களில் தண்ணீர் அதிகளவு தேங்கி, பயிர்கள் அழுகும் நிலை ஏற்பட்டுள்ளது. தமிழ்நாடே தண்ணீருக்காக தவம் கிடைக்கும் நிலையில், தேவகோட்டை பகுதியில் மட்டும் கனமழை பெய்கிறது. இதை நினைத்து அழுவதா..சிரிப்பதா.. என்று தெரியாமல் விவசாயிகள் விழிக்கின்றனர்.

உருவாட்டி விவசாயி கண்ணுச்சாமி கூறுகையில், கடந்த ஆண்டு பருவமழை தவறியதால் பெரும்பாலான விளை நிலங்கள் தரிசாக தான் உள்ளன. ஒரு சிலர் மட்டும் தான், நெல் பயிரிட்டனர். ஒவ்வொரு நாளும் கஷ்டப்பட்டு பயிரை காப்பாற்றி வந்தனர். தற்போது அறுவடைக்கு தயாராகும் நிலையில், மழை பெய்து பாதிப்பை ஏற்படுத்தி உள்ளது. வயல்களில் உள்ள தண்ணீரை வெளியேற்ற முடியவில்லை. பயிர்கள் அழுகும் நிலை ஏற்பட்டுள்ளது. விவசாயிகளை இயற்கை வாட்டி வதைக்கிறது. மழையால் சேதமான பயிர்களை கணக்கிட்டு, இழப்பீடு வழங்க அரசு முன்வரவேண்டும், என்றார்.

விவசாயிகளை கவலைப்பட வைத்துள்ள இம்மழை பல மாதங்களாக புழுக்கத்தில் தவித்த மக்களுக்கு ஓரளவு சந்தோஷத்தை கொடுத்துள்ளது.

இன்றைய வேளாண் செய்திகள்

11.01.2013 A.M

## நெல்லை, பாளையங்கோட்டை மார்க்கெட்டுகளில் கரும்பு கட்டுகள், மஞ்சள் குலை விற்பனை தீவிரம்

நெல்லை

நெல்லை, பாளையங்கோட்டை மார்க்கெட்டுகளில் கரும்பு கட்டுகள், மஞ்சள் குலை உள்ளிட்ட பொங்கல் பொருட்கள் விற்பனை சூடு பிடித்து உள்ளது.

பொங்கல் பண்டிகை

தமிழர் திருநாளான பொங்கல் பண்டிகை வருகிற 14–ந் தேதி (திங்கட்கிழமை) கொண்டாடப்படுகிறது. பொங்கல் திருநாளையொட்டி விவசாயத்தில் விளைந்த பொருட்களான கரும்பு, மஞ்சள் குலை, காய்கனிகள் ஆகியவற்றை கதிரவனுக்கு படைத்து பொங்கலிட்டு வழிபட்டு வருகின்றனர். மேலும் பொங்கலை முன்னிட்டு புதுமண தம்பதிகளுக்கு பெண் வீட்டார் சார்பில் பொங்கல் படியும் வழங்கப்பட்டு வருகிறது.

கரும்பு கட்டுகள்

இதையொட்டி நெல்லை டவுன் கடைவீதி, பாளையங்கோட்டை மார்க்கெட், கடை வீதிகளில் கரும்புகள் விற்பனைக்காக கட்டு கட்டாக குவித்து வைக்கப்பட்டு உள்ளன. ஒரு கரும்பு ரூ.30 வீதம் கட்டில் உள்ள கரும்புகளின் எண்ணிக்கைக்கு ஏற்றார் போல் கரும்பு விற்பனை செய்யப்படுகிறது. இதே போல் மஞ்சள் குலை ஒன்று ரூ.30 முதல் ரூ.50 வரையிலும், 25 பனங்கிழங்கு கொண்ட ஒரு கட்டு ரூ.50–க்கும் விற்பனை செய்யப்படுகின்றன. இதே போல் காய்கறி விற்பனைகள் கனிசமான அளவுக்கு உயர்ந்து உள்ளது.பாத்திரக்கடைகள், பர்னிச்சர், எலக்ட்ராணிக்ஸ் கடைகளில் வீடுகளுக்கு தேவையான ஏதேனும் ஒரு வீட்டு உபயோக பொருளை வாங்குகின்றனர். பின்னர் பொங்கலிடுவதற்கு தேவையான பச்சரிசி, அச்சு வெல்லம் உள்ளிட்ட பொருட்கள் மற்றும் கரும்பு, மஞ்சள் குலை, சர்க்கரை பொங்கலுக்கு தேவையான பொருட்கள்,

காய்கனிகள், வாழை இலை ஆகியவற்றை வாங்கிக் கொண்டு புதுமண தம்பதிக்கு பொங்கல் படி கொடுப்பதற்கு புறப்பட்டு செல்கின்றனர்.

அடுப்பு– பனைஓலை

பொங்கலுக்கு மறுநாள் விவசாயிகளுக்கு உதவி செய்யும் கால்நடைகளை கவுரவிக்கும் வகையில் மாட்டுப் பொங்கல் கொண்டாடப்படுகிறது. அன்றைய தினம் கால்நடைகளை நீராட்டி, கொம்புகளுக்கு எண்ணெய் அல்லது வர்ணம் பூசி, புது கயிறு அணிவிப்பார்கள். இதற்காக கடை வீதிகளில் விவசாயிகள் கால்நடைகளுக்கு தேவையான பொருட்களை வாங்கிச் சென்றனர்.இதுதவிர பொங்கலிடுவதற்கு மண்ணால் செய்யப்பட்ட மண் அடுப்பு கட்டிகள், மண் பானைகள் பாளையங்கோட்டை ராஜகோபால சுவாமி கோவில் பகுதியில் விற்பனைக்கு வரிசையாக அடுக்கி வைக்கப்பட்டு உள்ளன. இதே பொங்கல் பானையை சூடு படுத்துவதற்கு தேவையான பனை ஓலைகள் நகரம் முழுவதும் ஆங்காங்கே விற்பனைக்கு குவித்து வைக்கப்பட்டு உள்ளன.

மக்கள் கூட்டம்

பொங்கல் பொருட்கள் வாங்குவதற்காக நெல்லை டவுன் மற்றும் பாளையங்கோட்டை கடை வீதிகளில் நேற்று மக்கள் கூட்டம் அதிகமாக காணப்பட்டது. பொங்கல் படி கொடுப்பதற்கு பெரும்பாலான மக்கள் கார், ஆட்டோ ஆகியவற்றை வாடகைக்கு எடுத்துச் செல்கின்றனர். இதனால் வாடகை வாகனங்களுக்கு கிராக்கி ஏற்பட்டு உள்ளது.

## பொங்கல் பண்டிகையை முன்னிட்டு கோவில்பட்டியில் பருத்திமாறு கட்டு விற்பனை அமோகம்

கோவில்பட்டி

கோவில்பட்டியில் பொங்கல் பண்டிகையை முன்னிட்டு பருத்திமாறு விற்பனை களை கட்டி உள்ளது.

**கரும்பு கட்டுகள்**

தமிழர் திருநாளான பொங்கல் பண்டிகை வருகிற 14–ந்தேதி (திங்கட்கிழமை) கொண்டாடப்படுகிறது. இதையொட்டி கோவில்பட்டி மெயின் ரோடு பகுதிகளில் கரும்பு கட்டுகள் விற்பனைக்காக குவித்து வைக்கப்பட்டு உள்ளன. மதுரை, மேலூர் பகுதிகளில் இருந்து லாரிகளில் கரும்பு கட்டுகள் கொண்டு வரப்பட்டன.

மொத்த விற்பனையில் 15 எண்ணிக்கை கொண்ட ஒரு கட்டு கரும்பு, கடந்த ஆண்டு ரூ.250 முதல் ரூ.270 வரை விற்பனை செய்யப்பட்டது. இந்த ஆண்டு ரூ.270 முதல் ரூ.300 வரை விற்பனை செய்யப்படுகிறது. சில்லரை விலையில் கரும்பு கட்டுகள் சற்று விலை உயர்ந்து காணப்படும்.

**பருத்திமாறு கட்டு**

கோவில்பட்டி கடலைக்கார தெருவில் மண்பானை, மண் அடுப்புகள் விற்பனைக்கு தயாராக அடுக்கி வைக்கப்பட்டு உள்ளன. ஒரு மண்பானை ரூ.85 முதல் ரூ.150 வரை விற்பனை செய்யப்படுகிறது. ஒரு மண் அடுப்பு ரூ.50 முதல் ரூ.60 வரை விற்பனை செய்யப்படுகிறது.

அடுப்பு எரிக்க பயன்படுத்தப்படும் பருத்திமாறு கட்டு ரூ.26 முதல் ரூ.28 வரை விற்பனை செய்யப்படுகிறது. இதனை பொங்கல் பண்டிகையை முன்னிட்டு அடுப்பு எரிப்பதற்காக வாங்கிச் செல்கிறார்கள். இதனால் இதன் விற்பனை அமோகமாக உள்ளது.

## பவானி பகுதியில் செங்கரும்பு வெட்டும் பணி தீவிரம் புஞ்சைபுளியம்பட்டி சந்தையில் கரும்பு, கயிறு விற்பனை மும்முரம்

பவானி

பொங்கல் பண்டிகையையொட்டி பவானி பகுதியில் கரும்பு அறுவடை பணி தீவிரமாக நடந்து வருகிறது. புஞ்சைபுளியம்பட்டி சந்தையில் கரும்பு மற்றும் மாடுகளுக்கு தேவையான கயிறு விற்பனை தீவிரமாக நடைபெற்றது.

கரும்பு வெட்டும் பணி

தமிழர்களின் திருநாளான பொங்கல் பண்டிகை வருகிற 14–ந் தேதி கொண்டாடப்படுகிறது. பொங்கல் பண்டிகையில் முக்கிய இடம் பெறும் செங்கரும்பு ஈரோடு மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் விளைகிறது. பவானி அரசு ஆஸ்பத்திரி அருகில் பொங்கல் பண்டிகையையொட்டி செங்கரும்பு சுமார் 1½ ஏக்கரில் சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

இந்த கரும்புகள் நன்கு விளைந்து அறுவடைக்கு தயாராக உள்ளன. எனவே நேற்று முதல் இந்த கரும்புகள் வெட்டப்பட்டன. இதைக்கேள்விப்பட்டதும், பவானி பகுதியைச் சேர்ந்த ஏராளமான பொதுமக்கள் தோட்டத்திற்கே சென்று கரும்புகளை வாங்கி வருகின்றனர். இந்த கரும்பு 5 முதல் 8

வரை கொண்ட கரும்புகளாக ஒரு கட்டு கட்டப்படுகிறது. கரும்பின் அளவை பொறுத்து ரூ.200 வரை விற்பனை செய்யப்படுகிறது.

புஞ்சைபுளியம்பட்டி

புஞ்சைபுளியம்பட்டியில் வாரந்தோறும் வியாழக்கிழமை சந்தை நடைபெறும். இதைப்போல் நேற்று சந்தை நடைபெற்றது. இதற்கு பனையம்பள்ளி, புங்கம்பள்ளி, நல்லூர் காவிலிபாளையம், காராபாடி உள்பட பல்வேறு கிராமங்களில் இருந்து பொருட்கள் வாங்க வந்திருந்தனர்.

பொங்கல் பண்டிகை வருகிற 14–ந்தேதி நடைபெற உள்ளதால், சந்தைக்கு அதிக அளவில் கரும்பு விற்பனைக்கு கொண்டு வரப்பட்டிருந்தது. இந்த கரும்பு ஒரு ஜோடி ரூ.20 முதல் ரூ.50 வரை விற்பனையானது. மேலும் வீடுகளில் காப்பு கட்டுவதற்கு தேவையான பூலப்பூக்களும் அதிக அளவில் கொண்டு வரப்பட்டிருந்தது. இவை ஒரு கட்டு ரூ.10க்கு விற்பனையானது.

மாட்டு பொங்கல்

மாட்டு பொங்கல் 15–ந்தேதி கொண்டாடப்படுகிறது. அப்போது விவசாயிகள் மாடுகளுக்கு கயிறுகளை புதிதாக மாற்றுவார்கள். எனவே சந்தையில் கயிறுகள் விற்பனை செய்யும் கடைகள் அதிக அளவில் போடப்பட்டிருந்தது.

இந்த கடைகளில் விற்பனை செய்யப்படும் கட்டுகயிரு ரூ.30க்கும், தாம்பு கயிறு ரூ.5க்கும், கொம்பு கயிறு ரூ.10க்கும், கழுத்து கயிறு ரூ.15க்கும், திருகாணி ரூ.10, மணி ரூ.25 விலையில் விற்பனை செய்யப்பட்டது. இவைகளை விவசாயிகள் பார்வையிட்டு, அவர்களுக்கு தேவையான அளவிற்கு வாங்கி சென்றனர்.

## ஜனவரி 1 நிலவரப்படி அரிசி கையிருப்பு 3.22 கோடி டன்

புதுடெல்லி,

ஜனவரி 1–ந் தேதி நிலவரப்படி அரசு தானிய கிடங்குகளில் அரிசி கையிருப்பு 3.22 கோடி டன்னாக உள்ளது. இது நிர்ணயிக்கப்பட்ட இலக்கான 1.18 கோடி டன்னை விட இரண்டரை மடங்கு அதிகமாகும். இதே காலத்தில் கோதுமை கையிருப்பு நிர்ணயித்த இலக்கான 82 லட்சம் டன்னை காட்டிலும் 4 மடங்கு உயர்ந்து 3.44 கோடி டன் என்ற அளவை எட்டியுள்ளது. டிசம்பர் 1 நிலவரப்படி அரசு தானிய கிடங்குகளில் 3.76 கோடி டன் கோதுமையும், 3.06 கோடி டன் அரிசியும் இருந்தது.

2007–ஆம் ஆண்டிலிருந்து நெல், கோதுமை மகசூல் அமோகமாக இருந்து வருவதால் தானிய கிடங்குகள் நிரம்பி வழிகின்றன. இதனால் தனியார் வர்த்தகர்கள் அரிசி, கோதுமை ஏற்றுமதி செய்ய மத்திய அரசு அனுமதி அளித்துள்ளது. மேலும் அரசு கிடங்குகளிலிருந்து 45 லட்சம் டன் கோதுமை ஏற்றுமதி செய்ய ஒப்புதல் அளித்துள்ளது.

அவசர கால தேவைகளை பூர்த்தி செய்யவும், ஏழைகளுக்கு குறைந்த விலையில் உணவு தானியங்கள் கிடைக்கவும் மத்திய அரசு விவசாயிகளிடமிருந்து நெல், கோதுமையை கொள்முதல் செய்கிறது. 2009–ஆம் ஆண்டிலிருந்து, நீண்ட கால தேவைக்காக, மாதாந்திர கையிருப்புக்கு மேல் கூடுதலாக 30 லட்சம் டன் கோதுமை மற்றும் 20 லட்சம் டன் அரிசி கையிருப்பு வைக்கப்படுகிறது.

## தானிய கிடங்குகளில் இட நெருக்கடியை குறைக்க நடவடிக்கை கோதுமையை குறைந்த விலையில் விற்பனை செய்ய மத்திய அரசு திட்டம்

புதுடெல்லி,

தானிய கிடங்குகள் நிரம்பி வழிவதால், அளவுக்கதிகமாக உள்ள கையிருப்பை காலி செய்யும் வகையில் குறைந்த விலையில் கோதுமையை விற்பனை செய்ய மத்திய அரசு திட்டமிட்டுள்ளது. இதனால் மாவு ஆலைகள் மற்றும் பிஸ்கெட் நிறுவனங்கள் பெரிதும் பலனடைய வாய்ப்புள்ளது.

### ரபி சந்தை பருவம்

ரபி சந்தை பருவம் ஏப்ரல் மாதம் தொடங்க உள்ளது. எனவே அரசு முகமை அமைப்புகள் புதிதாக கோதுமை கொள்முதல் செய்ய வேண்டியிருக்கும். ஏற்கனவே தானிய கிடங்குகள் நிரம்பி வழிவதால், புதிய பருவத்தில் கடும் இட நெருக்கடி ஏற்பட உள்ளது. எனவே அதற்கு முன்பாக கையிருப்பை ஓரளவு காலி செய்ய மத்திய அரசு முடிவு செய்துள்ளது. இந்த வகையில் வெளிச்சந்தையில் விற்பனை செய்வதற்காக ஏற்கனவே 65 லட்சம் டன் கோதுமை ஒதுக்கப்பட்டுள்ளது. அதே சமயம் 30 லட்சம் டன் அளவிற்கே கோதுமை விற்பனையாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்நிலையில் விலையை குறைத்தால் மட்டுமே மாவு ஆலைகள் மற்றும் பிஸ்கெட் தயாரிப்பாளர்கள் கோதுமையை வாங்க முன் வருவார்கள் என்ற நிலை உள்ளது. தற்போது அரசு அமைப்புகள் கொள்முதல் விலை (குவிண்டால் ரூ.1,285), மாநில அரசின் லெவிகள் மற்றும் போக்குவரத்து செலவினம் போன்றவற்றை கணக்கிட்டு வெளிச்சந்தையில் கோதுமையை விற்பனை செய்து வருகின்றன. இதன்படி ஒரு குவிண்டால் கோதுமை பல்வேறு மாநிலங்களில் ரூ.1,404 முதல் ரூ.1,550 வரையிலான விலையில் விற்பனை செய்யப்படுகிறது.

இந்த நிலையில் மாவு மில்கள் மற்றும் பிஸ்கெட் நிறுவனங்கள் ஒரு குவிண்டால் கோதுமை ரூ.1,170 என்ற விலையில் வழங்கப்பட வேண்டும் என்று விரும்புகின்றன. இத்துடன் சரக்கு போக்குவரத்து கட்டணத்தை மட்டும் சேர்த்துக் கொள்ளலாம் என கருத்து தெரிவித்துள்ளன. அல்லது குறைந்தபட்ச ஆதரவு விலையை அடிப்படை விலையாக கொண்டு, சரக்கு கட்டணத்தையும் சேர்த்து விற்பனை செய்யலாம் என கூறியுள்ளன. அதாவது மாநில அரசுகளின் லெவி கட்டணத்தை ஆலைகள் மற்றும் பிஸ்கெட் நிறுவனங்கள் விரும்பவில்லை.

**உணவு மானிய சுமை**

ஒரு குவிண்டால் கோதுமைக்காக அரசு முகமைகள் ரூ.1,910 செலவிடுகின்றன. இந்நிலையில் இந்த விலைக்கு குறைவாக கோதுமையை விற்க மத்திய அரசு முடிவு செய்தால் உணவு மானிய சுமை மேலும் கடுமையாக உயரும். ஏற்கனவே மத்திய அரசின் உணவு மானிய சுமை ரூ.85,000 கோடியை தாண்டி விட்டது.

அதே சமயம் தானிய கிடங்குகளில் 3.40 கோடி டன் கோதுமை கையிருப்பு உள்ளது. புதிய பருவத்தில் 4 கோடி டன் கோதுமையை கொள்முதல் செய்ய மத்திய அரசு உத்தேசித்துள்ளது. ஆனால் ஒட்டுமொத்த அளவில் 7.50 கோடி டன் உணவு தானியங்களை சேமிக்கும் அளவிற்குத்தான் இடம் உள்ளது. இதில் 1.80 கோடி டன் தானியங்களை திறந்தவெளியில்தான் பாதுகாக்க வேண்டிய நிலை உள்ளது.

**3.90 கோடி டன் கோதுமை**

இவ்வாறு திறந்தவெளியில் வைக்கும் உணவு தானியங்களை சில வாரங்களுக்கு மேல் பாதுகாக்க இயலாது. இந்த நிலையில் தானிய கிடங்குகளில் நெருக்கடியை குறைக்க வேண்டுமானால் வெளிச்சந்தை விலையை உடனடியாக முடிவு செய்து விற்பனை செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.